பொதுசன நூலகம்
...ந்துறைப் படிப்பகம்
...நகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

C/604
Job! With High Salary
Follow

Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 27 ஞாயிற்றுக்கிழமை (10.04.2011) பக்கங்கள் 12 ஓசை – 193

## யாழ்.நகர மத்தியில் ஆணின் சடலம் மீட்பு

### இந்த மரணத்துக்கு காரணம் என்ன?



(யாழ்ப்பணம்)

யாழ்.நகர மத்திய பேருந்து நிலையப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரினால் மீட்கப்பட்டு, யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டது.

திருகோணமலையை வசிப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வருமான டேவிட் அன்ரனி (வயது-68) (11ஆம் பக்கம் பார்க்க)

## அரச நிர்வாகத்தில் தமிழ்மொழி அமுல்படுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள 29 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் சிங்களத்துடன் தமிழும் நிர்வாக மொழியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்க பொதுச்செயலர் த.மனோகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் தேசிய மொழிகள் மற்றும் சமூக உறவுகள் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவை சந்தித்தபோதே இந்தக் கோரிக்கை அடங்கிய மனு கையளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த 29 பிரதேச செயலகங்களில் சிங்களத்துடன் தமிழும் நிர்வாக மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அது இன்றுவரை நடைமுறைக்கு வரவில்லை. இதன் காரணமாக தமிழ்பேசும் மக்கள் தமது அன்றாட அரச கருமங்களை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந் நிலையில் இலங்கையிலுள்ள அரச அலுவலகங்கள் தமிழ் மொழியை நிர்வாக மொழியாக நடைமுறைப்படுத்துவதற்கு போதிய தமிழ்ப் பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட புலம்பெயர் தமிழர்களுக்கு அழைப்பு

## ஊக்கம் கொடுக்கும் அமெரிக்க முயற்சி

(வாஷிங்டன்)

**புலம்பெயர் தமிழர்களின் பிரதிநிதிகளை இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட வைக்கும் தீவிர முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது. இதன் முதற்கட்டமாக வெளிநாடுகளில் வசிக்கும் புலம்பெயர் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்களின் பிரதிநிதிகளை அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் சந்தித்து தொடர்ச்சியான உரையாடல்களை நடாத்தி வருகின்றனர்.** (11ஆம் பக்கம் பார்க்க)

## கையடக்கத் தொலைபேசியில் விபரம்; வீட்டுக்கு வருகின்றன சான்றிதழ்கள்

### தகவல் தொழில்நுட்ப அமைச்சு அறிவிப்பு



(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகள் மூலம் விபரங்களைப் பெற்று பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுச் சான்றிதழ்களை துரிதமாக வழங்குவதற்கான செயற்திட்டமொன்றை தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு அறிவித்துள்ளது. அரசாங்கத் தகவல் நிலையம் மற்றும் சம்பந் தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு கையடக்கத் தொலைபேசி (12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பதவியேற்பு

(திருகோணமலை)

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 12 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுபபினர்களுக்கான பதவியேற்பு (11ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைச் சிப்பாய்கள் காணாமல் போன மர்மம்

### விசாரணைகள் தொடர்கின்றன

(கொழும்பு)

கடற்படையினர் நால்வர் காணமல் போனது தொடர்பில் அன்று முல்லைத்தீவு சுண்டிக்குளம் கடற்படை முகாமில் கடமையிலிருந்த அனைத்து அதிகாரிகளும் விசாரணைக்கு உட்படுத்தப் (11ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையிலுள்ள பல ஊடகங்கள் நடுநிலை தவறிச் செயற்படுகின்றன

### அமைச்சர் ஹெகலிய குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கையிலுள்ள பல ஊடகங்கள் நடுநிலைமை தவறிச் செயற்படுவதாகவும், எனவே இலங்கையில் எந்தவொரு ஊடகத்திற்கும் அளவுக்கதிகமான சுதந்திரத்தை வழங்க முடியாதென ஊடகத் துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வின் போது பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவைக் கலைத்துவிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர விடுத்த வேண்டு கோளுக்குப் பதிலளித்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தவறு செய்யும் அனைத்துப் பிரிவினரையும் தண்டிப்பதற்கு பல்வேறு வழிமுறைகள் இருப்பது (11ஆம் பக்கம் பார்க்க)

## உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு ஏற்றதாக வடக்கின் பாதுகாப்பு நிலைமை இல்லை

### அரசிடம் கூட்டமைப்புத் தெரிவிப்பு

(கொழும்பு)


வடக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நிலைமையானது உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு இணங்கியதாக இல்லை. எனவே வடக்கில் உயர்பாதுகாப்பு வலயங்கள் அவசியமில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளது.

கடந்த வியாழனன்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற அரசாங்திற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான கலந்துரையாடலின்போது மேற்படி விடயத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இக்கலந்துரையாடலின்போது த.தே.கூட்டமைப்பின் தூதுக்குழுவுக்கு கூட்டமைப்பின் நாடாளுமன் றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தலைமை தாங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோரும் இக்குழுவில் அங்கம் வகித்தனர். (12ஆம் பக்கம் பார்க்க)

# பனைவள அபிவிருத்தியின் மூலமாக சமூக முன்னேற்றத்தைக் காணலாம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசனை



(யாழ்ப்பாணம்)

பனைசார் உற்பத்திகள் தரமான பொருட்களையும், மக்களுக்கு பயன்தரக்கூடிய வகையிலும் அமையப் பெறவேண்டும் என ஈழமக்கள் ஜனநா...க் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற பனைவளம் மற்றும் அது தொடர்பிலான ஆய்வுகள் ஆலோசனை குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் (12ஆம் பக்கம் பார்க்க)

# சட்டவிரோத மீன்பிடியைத் தடுப்பதற்கு புதிய விதிகள் அமுலுக்கு வரவுள்ளன



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக் கடற்பரப்புகளில் சட்டவிரோதமான முறையில் சிறகுவலை, களங்கட்டி வலை மற்றும் கூடுவலைத் தொழில்களில் ஈடுபடும் மீனவர்களிடையே நிலவும் குழப்பகரமான நிலையைத் தெளிவுபடுத்தி புதிய சட்ட விதிமுறைகள் அமுல்படுத்தப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்தார்.

இத்தொழில் நடவடிக்கைகள் குறித்து பல்வேறு வகையான குழப்பகரமான சம்பவங்கள் நடைபெற்றுவருவதாக யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்கு சமாச மட்டங்களிலிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதன் காரணமாகவே சிறகுவலை, களங்கட்டி வலை, கூடுவலைத் தொழில் நடவடிக்கைகளில் நிகழ்ந்து வருகின்ற முறைகேடான சம்பவங்களின் பின்னணியில் அவற்றுக்கான அனுமதி தொடர்பான சட்ட விதிமுறைகள் மாற்றியமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்தில் அதன் பிரதிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தலைமையில் கூடி இவ்விடயம் குறித்து ஆராய்ந்து முடிவெடுக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்தார்.

ஏற்கனவே பாசையூர் கடற்தொழிலாளர் சங்கம், யாழ். கடல்நீரேரிப் பகுதியில் தமது சிறகுவலை உபகரணங்கள், கடலுணவுகள் களவாடப்பட்டு வருவதாகக் கவலை வெளியிட்டிருந்ததுடன், அவற்றை மீனவ சமாச மட்டத்தில் கூடி தமது பிரச்சினைக்கு தீர்வொன்றைப் பெற்றுத்தரும்படி யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளருக்கு மனுச் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (பா)



(யாழ்ப்பாணம்)

**இலங்கையில் பிறந்து ஜேர் மனியில் செனட்டராகப் பதவி வகித்த இயன் கே.கரனினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 18 லட்சம் ரூபா பெறுமதியான பஸ் ஒன்றை பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அதிபர் திருமதி சுந்தரேசனிடம் இலங்கைக்கான ஜேர்மன் தூது வர் ஜேன்ஸ் புளோட்னர் நேற்று கையளித்தார்.**

**யாழ் பருத்தித்துறையில் 1939 ஆம் ஆண்டு பிறந்த இயன் கே.கரன் தனது பதின்மர் வயதில் இலங்கையை விட்டு வெளியேறினார்.**

**பின்னர் அவர் ஜேர்மனியின் ஹம்பர்க்கில் மாநில பொருளாதார விவகார அமைச்சராகப் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.**

## கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களம், முறைசாரா கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர், செயற்திட்ட உத்தியோகத்தர், போதனாசிரியர்கள் ஆகியோருக்கான முறைசாராக் கல்விக் கருத்தரங்கினை நடத்தவுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இக் கருத்தரங்கு நாளை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியில் ஒருநாள் வதிவிடப் பயிற்சியாக நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கு முக்கியமாக முறைசாரா கல்விப்பிரிவு எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும், அதற்கான தீர்வுத் திட்டங்களை வகுத்தல் தொடர்பிலும், தகவல் சேகரித்தல், ஆவணப்படுத்தல், அனுப்புதல் முதலான விடயங்களை கணினி மயப்படுத்தல் தொடர்பிலும் நடைபெறவுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை தவறாது கருத்தரங்கில் பங்குபற்றச் செய்யுமாறு வடமாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (06)

## அடைக்கல அன்னை ஆலயத்தில் கல்வாரித் தியான வழிபாடுகள்

(கொக்குவில்)

யாழ். அடைக்கல அன்னை தேவாலயத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி 6 ஆம் வெள்ளி கல்வாரி தியான வழிபாடுகள் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள திருப்பாடுகளில் பக்தர்கள் கூடி ஆராதனையில் ஈடுபடுவர்.

அன்றையதினம் காலை 6 மணிக்கு ஆலயத்தில் திருப்பலியும், மாலை 4.30 மணிக்கு ஆலய முன்றலில் அமைந்துள்ள ஹெவியில் தியானம், திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படுதலுடன் சிலுவைப் பாதையும் நடைபெறும்.

மேற்படி கல்வாரி திருநாளுக்கான ஆயத்த வழிபாடுகள் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 14 ஆம் திகதி வியாழன் மாலை 5 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுத்தல் இடம்பெறும்.

22 ஆம் திகதி பெரிய வெள்ளி துக்க வழிபாடும் அல்லோரியாச் சனி முடிய 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உயிர்ப்பு திருநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். (68)

## புற்றுநோய் பிரிவுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை புற்று நோய் பிரிவுக்கு சங்கானை ஹற்றன் நஷனல் வங்கியால் சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான உளவளத் துணை ஆலோசனை மையத்திற்கான நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இந்நிதி இன்று காலை யாழ். போதனா வைத்தியசாலை புற்று நோய் வைத்திய விடுதியில், புற்று நோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி க.ஜெயக்குமாரிடம் கையளிக்கப்படவுள்ளது.

யாழ். புற்று நோய் வைத்திய நிபுணர் சங்கானை ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளரிடம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

புற்று நோய் குறித்த விழிப்புணர்வை அனைத்துத் தரப்பினரிடமும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக இந்நிதியுதவி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கூட்டம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் க.தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், சமூக சேவை உத்தியோகத்தர் இ.அருந்தவராசா, முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதால் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (104)

# விவசாய பண்ணைகளை திருத்துமாறு அதிகாரிகளுக்குப் பணிப்பு - ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி மற்றும் வவுனியா தாண்டிக்குளம் விவசாயப் பண்ணைகளை விரைவாக திருத்தியமைக்குமாறு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி வட மாகாணத்தின் விவசாய அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு உத்தரவிட்டார்.

மேற்குறிப்பிட்ட இரண்டு பண்ணைகளும் நீண்டகாலமாக எவ்வித அபிவிருத்தியோ திருத்தப் பணிகளோ மேற்கொள்ளப்படாத நிலையில் அவற்றை உடனடியாக திருத்தியமைக்குமாறு அவர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த இரு பண்ணைகளின் திருத்தத்திற்காக தலா 5 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்வதாகவும் அவர் அறிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் யு.என்.எம்.கல்தீன், யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

# கிளிநொச்சி நடமாடும் மருத்துவ சேவையில் 400 இற்கும் மேற்பட்ட மாணவர் பயனடைவு



(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களமும், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடமும் இணைந்து கிளிநொச்சி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடத்திய நடமாடும் மருத்துவ சேவை முகாமில் 400 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்தனர்.

கடந்த 3 ஆம் திகதி கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இந்த நடமாடும் மருத்துவ சேவை முகாமை பேராசிரியர் என்.சிவராஜா வழிநடத்தினார்.

இந்த நடமாடும் மருத்துவ சேவையில் பாம்புக் கடிக்கான சிகிச்சை, தனிப்பட்ட மருத்துவ சிகிச்சை, கண் சிகிச்சை, பற்சிகிச்சை ஆகியன மாணவர்களுக்காக நடத்தப்பட்டது. இதன் மூலம் 400 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் நன்மையடைந்தனர்.

இந்தச் சேவையில் வடக்கு மாகாண பொது நிர்வாக பிரதிச் செயலாளர் தி.இராசநாயகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பி.கார்த்திகேயன், மருத்துவ அலுவலர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், கிளிநொச்சி இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## யோகர் சுவாமிகளின் குரு பூசைத் தினம்

(யாழ்ப்பாணம்)

யோகர் சுவாமிகளின் 47 ஆவது குருபூசைத்தினம் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக சிவதொண்டன் சபைச் செயலாளர் மூ.லிங்கேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் புதன் கிழமை யாழ். சிவதொண்டன் நிலைய புராதன மண்டபத்தில் அமைந்துள்ள சுவாமிகளது திருமேனிக்கும், கொழும்புத்துறை ஆசிரமத்தில் திருவடிக்கும் திவ்வியமான அபிடேக ஆராதனைகள் நிகழும். அத்துடன் நண்பகல் மகேஸ்வர பூசையும், அன்னதானமும் இடம்பெறும்.

சிவதொண்டன் நிலையத்தில் இன்றிலிருந்து நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை வரை வழமைபோல் ஆசிரம வாழ்வு அனுஷ்டிக்கப்படும்.

இந்நாட்களில் பூசை, நாள் வாய்ப்பாராயணம், நற்சிந்தனை முற்றோதல், தியானம் என்பன நிகழும் என அவர் மேலும் அறிவித்துள்ளார்.


## சிறு விளம்பரம்

**காணியுடன் ஹோட்டல்- விடுதிச்சாலை விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம், கண்டி வீதியில் $2^1/_2$ பரப்பு காணியுடன் ஹோட்டல் - விடுதிச்சாலை விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:- 0776097586 (சி/665)

ஆசையைப் போன்ற நெருப்பு வேறு எதுவும் இல்லை. ஆசையால் உந்தப்பட்ட மனிதர்கள் வேட்டையில் விரட்டப்பட்ட முயலைப் போல ஒடுகிறார்கள்.

- புத்தர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## கல்வி முறையில் மாற்றம் வேண்டும்

நமது நாட்டின் எப்பாகத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கு தனியார் கல்வி நிறுவனங்களின் வியாபகத்தையே காணக்கூடியதாகவுள்ளது.

பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக் குறை, தனியார் கல்வி நிறுவனங்களை அதாவது, ரியூசன்களை வளர்த்து வருவதற்கு ஓரளவு காரணமாக அமைந்து விடுகிறது.

அதேநேரம் இக்கல்வி நிறுவனங்களில் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களே பெரும்பாலும் இங்கு கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர் என்ற உண்மையையும் எவரும் மறுப்பதற்கில்லை.

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவருக்கும் தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கக்கூடிய வாய்ப்புகள் அரிதாகவே காணப்படுகின்றன.

பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை அதிகம் நாடுவதாகத் தெரியவில்லை. அதேநேரம் பொருளாதார வசதி படைத்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களில் பெரும்பாலானோர் தனியார் கல்வி நிறுவனங்களை நாடிச் செல்வதைக் காண முடிகிறது.

அனுபவமும், திறமையும் வாய்ந்த ஆசிரியர்கள் போதியளவு இல்லாமையே மாணவர்கள் ரியூசன் வகுப்புக்களை நாடுவதற்கு வழிவகுத்துள்ளதாக அரசாங்கம் ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இக்கருத்து சரியென்றோ, பிழையென்றோ நாம் இங்கு கூறவரவில்லை. உண்மையில் பாடசாலைகளில் கற்பிக்கும் திறமையான ஆசிரியர்களே தனியார் கல்வி நிறுவனங்களிலும் கற்பித்து வருகிறார்கள்.

இதற்கு உண்மையான காரணம் என்வென்பதை நாம் கண்டறிய வேண்டும். ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்படும் சம்பளம் போதுமானதாக இல்லை என்பது வெளிப்படையாகும்.

இந்நிலையில், அவர்கள் பாடசாலைகளில் தாம் கற்பிக்கும் நேரத்தை மிச்சம் பிடித்து தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செல்வதால் அங்கு அவர்கள் கணிசமான அளவு ஊதியத்தைப் பெறக்கூடியதாக இருப்பதே உண்மையான காரணமாகும்.

பணம் சம்பாதிப்பது ஒன்றையே தலையாய குறிக்கோளாகக் கொண்டு ஆசிரியர்கள் செயற்படுவதால், உண்மையான ஆசிரியத் தொழிலின் இலட்சியத்திற்கு மாறாக, அவர்கள் இயங்கி வருவதாக கருதவேண்டியுள்ளது.

இதனால், இதுவரை காலமும் புனிதமான தொழிலாகவும், கௌரவமான தொழிலாகவும் கருதப்பட்டு வந்த இத்தொழில், தற்போது போட்டி வர்த்தகத் தொழிலாக மாறிவிட்டமை கவலை அளிக்கும் செயலாகவுள்ளது.

மாணவர்களைப் பொறுத்த வரையில் ரியூசனுக்குப் போவதை ஒருவகை நாகரிகமாக அவர்கள் கருதுகிறார்கள். இந்த ரியூசன், தனியார் கல்வி நிறுவனங்களில் ஆரம்பித்து மூலை முடுக்குகளில் எல்லாம் உள்ள வீடுகளிலும் இரவு எட்டு மணி வரை நடைபெற்று வருவதையும் காண முடிகிறது. புற்றுநோய் போல் வியாபித்துள்ள ரியூசன் வகுப்புகளில் இருந்து மாணவர்களை மீட்டெடுப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

ரியூசன் மோகத்தில் கவர்ந்திழுக்கப்பட்டிருக்கும் மாணவர் சமூகம் ஆசிரியர்களைத் தம் குருவாக மதிக்கும் மனப்பக்குவத்தைத் தாண்டி தோழமை உணர்வுடன் பழகி வருவதால், அவர்களுக்குக் கொடுக்கவேண்டி மரியாதையைக் கொடுக்கத் தவறிவிடுகிறார்கள்.

இவர்களின் ரியூசன் மோகத்திற்கு பெற்றோரகளே பெருமளவு ஆதரவாக இருப்பதால், அதிலிருந்து மாணவர்களை மீட்டெடுக்க முடியாதென்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே, கல்வித் துறையில் நிலவும் குறைபாடுகள் நீங்கும் வரை ரியூசன் கலாசாரம் வளர்ந்து கொண்டே இருக்கும் என்பது மறுக்க முடியாத யதார்த்தமாகும்.

- ஆசிரியர் -

# தெளிவான அரசியல் மூலமே மக்கள் தேவைகளுக்குத் தீர்வுகாண முடியும்

### ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர்



(யாழ்ப்பாணம்)

சரியான தெரிவு, தெளிவான அரசியலினூடாகவே மக்களது தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் உரிய வகையில் தீர்வு காண முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

அரியாலை பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு என்ரிப் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் வகுப்பறைத் தொகுதிக் கட்டடத்திற்கான அடிக கல்லினை நாட்டிவைத்து நேற்றைய தினம் உரையாற்றுகையிலேயே யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்: கடந்த கால அரசியல் தலைமைகள் விட்ட தவறுகள் காரணமாகவே எமது மக்கள் இழப்புக்களையும் அழிவுகளையும் சந்திக்க வேண்டி ஏற்பட்டதாகவும், கடந்த 30 வருட கால யுத்தத்தில் அழிவடைந்த எமது பிரதேசத்தை 30 மாதத்தில் மீளக் கட்டியெழுப்ப முடியாது. எனவே அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்ப முன்வர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இப்பிரதேச மீள்குடியேற்றத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஏற்படுத்தித் தந்ததாகவும், அப்போது அமைச்சர் அவர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு பதிலளிக்கையில் கட்டம் கட்டமாக அவை நிறைவேற்றப்படும் எனத் தெரிவித்ததின் ஒரு கட்டமாக இந்நிகழ்வு அமைவதாகவும் தெரிவித்தார்.

சுயலாப அரசியல் நடாத்தும் சிலர் மீள்குடியேறிய பிரதேசங்களில் எவ்விதமான அபிவிருத்திப் பணிகளும் நடைபெறுவதில்லை என்ற பொய்ப் பிரசாரங்களை செய்வதன் ஊடாக எமது பிரதேச அபிவிருத்திக்கு அவர்கள் முட்டுக் கட்டையாகத் திகழ்வதாகவும் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் கணேசராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லூர் பிரதிக் கல்விப்பணிப்பாளர் இராசலிங்கம், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சிறீகணேஸ், ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ. ரவீந்திரதாசன் மற்றும் மாணவர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## திருத்தப்பட்ட புதிய வாக்காளர் இடாப்பு மே மாதம் முதல் அமுலுக்கு வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதவித்தேர்தல் அலுவலகத்தின் 2010 ஆம் ஆண்டிற்கான புதிய வாக்காளர் கணக்கெடுப்பின்படி யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் மூன்று இலட்சம் வரை குறைவடையவுள்ளதாக யாழ்.உதவித்தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

மேற்படி தேர்தல் தொகுதியில் இருந்து கடந்த காலங்களில் யுத்த நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் புலம்பெயர்ந்தவர்களது பெயர் விபரங்கள் வாக்காளர் இடாப்பில் அப்படியே வைக்கப்பட்டிருந்தது.

தற்சமயம் நாட்டில் யுத்தம் நிறைவடைந்து அனைவரும் தமது சொந்தப் பகுதிகளுக்கு திரும்பியுள்ளனர். இதன் காரணமாக 2010 ஆண்டுக்கான புதிய வாக்காளர் கணக்கெடுப்பு நடாத்தப்பட்டு அவ்வாறு மேலதிகமாக இருப்பவர்களது பெயர்களை வாக்காளர் இடாப்பில் இருந்து நீக்குமாறு அரசாங்கத்தினால் பணிக்கப்பட்டதன் காரணமாக இக்குறைப்பு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் சுமார் மூன்று இலட்சம் வரையான வாக்காளர் எண்ணிக்கை குறைவடையவுள்ளதாகவும். இந்த வாக்காளர் இடாப்பு எதிர் வரும் மேமாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே எட்டு இலட்சத்திற்கும் மேற்பட இருந்து வந்த வாக்காளர் எண்ணிக்கை மூன்று இலட்சம் வரை குறைவடைந்து ஐந்து இலட்சமாக உள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

## விளையாட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும்

திருநெல்வேலி மகாத்மாஜி சனசமூக நிலையம் நடத்தும் பாலர் பாடசாலையின் விளையாட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மகாத்மாஜி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலைய உபதலைவர் ச.திவ்வியரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் பிரதம விருந்தினராகவும், யாழ்.வலய ஆரம்ப பிள்ளை அபிவிருத்திப் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் க.விமலநாதன், ஈ.பி.டி.பி கட்சியின் நல்லூர் அமைப்பாளர் அ.இரவீந்திரதாசன், மேஜர் டபிள்யு.ஆர்.தர்மசேன, வி.பாறே மற்றும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சு.சந்திராதேவி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

## நடவடிக்கை

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த, சுமார் 1000 வர்த்தகர்களுக்கு எதிராகத் தாம் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை நேற்றுத் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட முற்றுகையின் மூலம் இந்த வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக நுகர்வேர் விவகார அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

## இந்திய இழுவைப்படகு நெடுந்தீவில் கரை ஒதுங்கியது

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டாம் திகதி தமிழகத்தில் இருந்து கடற்றொழிலுக்குப் புறப்பட்டு காணாமற்போனவர்களுடையது எனச் சந்தேகிக்கப்படும் மீன்பிடி இழுவைப்படகு ஒன்று நெடுந்தீவுக் கரையோரப் பகுதியில் கரையொதுங்கியுள்ளதாக நெடுந்தீவு கடற்றொழிலாளர் சமாச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நேற்றைய தினம் இப்பிரதேசத்தில் தொழில் நடவடிக்கைகளுக்குச் சென்ற மீனவர்கள், இவ் இழுவைப் படகு நெடுந்தீவுக் கரையோரமாக கரையொதுங்கியதாகத் தெரிவித்தனர். ஏற்கனவே இக் கடற்பரப்பில் கரையொதுங்கிய ஆண் ஒருவருடைய சடலம் மீட்கப்பட்டு பொலிஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (பா)

## புதுவருட தினத்தன்று அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு


(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த மார்ச் 8ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 8ஆம் திகதி வரையுமான காலப்பகுதியில் நடாத்தப்பட்ட வனிதா வாசனா அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு அன்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அதிர்ஷ்டம் பார்த்தல் நடைபெறவுள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்ட மக்கள் வங்கியின் கிளைகள் அனைத்தும் புதுவருட தினத்தன்று காலை 9.00 மணிக்குத் திறந்து கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

அன்றைய தினம் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் வனிதா வாசனா அதிர்ஷ்டசாலிகளுக்கு அவர்களின் வைப்புத் தொகையில் இரண்டு மடங்கு கிடைக்கவுள்ளது. இவை தவிர வாடிக்கையாளர்களுக்கு கைவிசேடமும் மேலும் பரிசுப் பொருட்களும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. (பா)

## செயலிழந்துள்ள நிலையில் மணிக்கூட்டுக் கோபுர கடிகாரம்



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் அமைந்திருக்கும் மணிக் கூட்டுக் கோபுரத்தின் மணிக்கூடு மீண்டும் செயலிழந்துபோயுள்ளது.

ஏற்கனவே, ரோமன் இலக்கத்துடன் முள்கடிகாரமாக இருந்த இம்மணிக்கூட்டுக்கோபுர மணிக்கூடு தற்காலத்திற்கு ஏற்றவகையில் டிஜிற்றல் முறையில் புனரமைக்கப்பட்டு செயற்பட்டு வந்தது.

இக்கடிகாரம் அண்மையில் பழுதடைந்ததும் அது பற்றி பொது மக்கள் புகார் செய்ததன் பேரில் திருத்தப்பட்டதும் தெரிந்ததே. அது மீண்டும் தற்சமயம் செயலிழந்து போயுள்ளதனை அவதானிக்க முடிகின்றது. (பா)

# என்மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கவும் வவுனியா நகரசபை உபதலைவர் ரதன் கோரிக்கை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா நகர சபையின் உபதலைவராகக் கடமையாற்றும் தான் நகரசபை தொடர்பாக எந்தவிதமான தவறுகளையும் செய்யவில்லை. தன்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே வவுனியா நகர சபை உபதலைவர் எம்.எம்.ரதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:

வவுனியா நகர சபைக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற காலத்தில் இருந்தே உப தலைவராக பெயரளவில் மட்டுமே நான் பதவி வகித்து வருகிறேன். இதற்கு முன் இருந்த தலைவர் எனக்கு எந்த விதமான பொறுப் புகளையும் வழங்கவில்லை. இது எமது நகரசபையின் உறுப்பினர்களுக்கும் நன்கு தெரியும். எமது மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கும் இதைத் தெரியப் படுத்தியுள்ளேன்.

நான் நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டது தலைவர், உப தலைவர், உறுப்பினர் பதவிக்காக அல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்ய வேண்டுமென்பதற்காகவே கடுமையாக உழைத்தேன்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னரும் தமிழ் பேசும் மக்கள் தமிழ்த் தேசியத்தின் மீது பற்றுக்கொண்டு உறுதியோடும் கொள்கையோடும் வாழுகின்றார்கள் என்பதை அத்தேர்தலில் நாம் நிரூபித்தோம்.

பதவியேற்ற காலத்திலிருந்து இன்றுவரை எமது நகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் நடக்கும் தமிழ் மக்களுக்கு எதிரான பல்வேறுபட்ட விடயங்களைப் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டியுள்ளேன். ஆயிரமாயிரம் தியாகங்களுக்கு மதிப்பளித்து இலட்சக்கணக்கான மக்களின் உயிர் இழப்புகளையும் கணணால் பார்த்து அதைப் புரிந்து கொண்டு அரசியலுக்குள் வந்தவன் நான்.

கல்விச் சமூகத்தின் ஊடாகக் கிடைக்கப்பெற்ற எனது அரசியல் எழுச்சியைக் கண்டு பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் கொண்டு வந்த குற்றச்சாட்டுகள் உண்மைகள் அல்ல. 29 குற்றச்சாட்டுகள் என் மீது சுமத்தப பட்டுள்ளன.

இவற்றில் போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய நிலையில் 2010 ஆம் ஆண்டு ஆவணி மாதம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக இந்து நாகரிகப் பாடக் கருத்தரங்கினை மல்லாவி மத்திய கல்லூரியில் நடத்து வதற்கு எமது சபையின்செயலாளரது வாகனத்தினைக் கொண்டு சென்றதும் என்மீது சுமத்தப் பட்ட ஒரு குற்றச்சாட்டு.

இது பாரிய குற்றமா? அனைத்து மக்களும் இதை உணர வேண்டும். இலவசக் கருத்தரங்கு நடத்தியதற்கான வலயக் கல்விப் பணிப்பாளரது கடிதத்தை எமது சபைக்கு ஒப்படைத்துள்ளேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை களுக்கும் கோட்பாடுகளுக்கும் அமைவாக எமது தேசத்தின் ஜனநாயக வழியிலான விடுதலைக்காக அரசியலில் தொடர்ந்து இருப்பேன். ஆசிரியர் தொழிலைக் கைவிடமாட்டேன். அதுவொரு புனிதமான தொழில். என் மீதான போலியான வதந்திகளையோ, குற்றச்சாட்டுகளையோ கண்டு எனது மாணவர்களும் மற்றும் ஆதரவாளர்களும் குழப்பமடைய வேண்டாம்.

பொறுமையாக இருங்கள் காலம் யாவற்றுக்கும் சரியான பதில் சொல்லும். குறுக்கு வழியிலான அரசியல் சிந்தனை வெல்லுமா அல்லது இறை சிந்தனை மிக்க நேரிய அரசியல் சிந்தனை வெல்லுமா என்பதைக் காலம் யாவருக்கும் உணர்ததி நிற்கும்.

எமது தலைமைத்துவம் என்ன முடிவு எடுக்கின்றதோ அதற்குக் கட்டுப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்து எனது அரசியல் பணியை முன்னெடுப்பேன் எனவும் அவர் தெரிவித்தார்.

ஒரு தவறையேனும் ஆதார பூர்வமாக, சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடியதாக சம்பந்தப் பட்டவர்கள் முன்வைப்பார் களாயின், தமிழ் மண்ணில் பற்றுக்கொண்டவன் என்ற அடிப படையில் அதை முழுமனதோடு ஏற்றுக் கொள்ளத்தயாராக இருககிறேன் என்றும் தெரிவித்தார்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலக நலன்புரிக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை செயலக மாநாட்டு மண்டபத்தில் திருமதி மோகனேஸ்வரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (19)

## சோலர் கருவி திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மறவன்புலோவில் அமைந்துள்ள யா/சகலகலாவல்லி வித்தியா சாலையில் பெறுமதி வாய்ந்த சோலர் கருவி ஒன்று களவு போயுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அளவில் இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. திருட்டுப் போன இச் சோலரின் பெறுமதி ஐம்பது ஆயிரம் ரூபா என மதிப பிடப்பட்டுள்ளது.

இத்திருட்டுத் தொடர்பாக அதிபர் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மூறைப்பாடு தெரிவித்துள்ளார். (17)

## யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீள்குடியேறிய மக்களுக்காக வழங்கப்படும் 25ஆயிரம் ரூபா நிதியில் 5 ஆயிரம் ரூபா மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாகவும் மீதி 20 ஆயிரம் ரூபா இதுவரை வழங்கப்படவில்லை என முஸ்லிம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வீட்டுத்திட்டத்திற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படாத நிலையில் காணப்படுவதாகவும் தொழிலுக்கான நிதியுதவியும் தமக்குக் கிடைப்பதில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ்ப் பத்திரம், ஆங்கிலப் பத்திரம் என பத்திரங்கள் நிரப்புவதும், குடியேறிய மக்களை திடீரென வரவழைத்து பரிசோதிப்பதும் போன்ற வழமையான நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான உதவிகள் தமக்கு கிடைப்பதில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதைவிட பொது நிறுவனஙகளின் உதவிகளும் வெறும் பேச்சளவில்தான் உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீள்குடியேறிய மக்கள் பெற்றுள்ள உதவிகளில பாதியளவு கூட யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேறிய முஸ்லிம் மக்களுக்கு கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து மீளக்குடியேறிய முஸ்லிம் மக்களுக்கான உதவிகளை பெற்றுக் கொடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (19)

## சிரார்த்ததினமும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

மில்க்வைற் சோப் தொழிலக ஸ்தாபகர் வீ.மு.கந்தையா பிள்ளையின் 52 ஆவது சிரார்த்ததின நிகழ்வும் நூல் வெளியீடும் நாளை திங்கட் கிழமை காலை 10 மணிக்கு மிலக் வைற் சோப் தொழிலகத்தில் சிவநேயர் இ.தவகோபால் தலைமையில் நடைபெறவுள்ளது.

## தமிழருவி சஞ்சிகை நடத்திய போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழருவி சஞ்சிகை நடத்திய பாடசாலை மாணவர்களுக்கான கவிதை, கட்டுரைப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

கவிதை: வானதி விஸ்வநாதன் - இணுவில் மத்திய கல்லூரி விதுசா கிருபாகரன் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், நா.கீர்த்திகா - இணுவில் மத்திய கல்லூரி.

கட்டுரை: ச.தரண்யா - தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, ஜெ.ஜெயவர்மன் - தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி,கி.தனுசா - தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி,(44)

## புதுவருடப் பரிசில்கள்

(யாழ்ப்பாணம்)

சிங்கள தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு இலங்கை வங்கியின் யாழ்.மேல்தரக் கிளையும் அதன் விரிவாக்கல் காரியாலயங்களும் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களுக்காக புத்தாண்டு தினமான 14 ஆம் திகதி அன்று சுப நேரமான பிற்பகல் 3.00 மணி தொடக்கம் திறக்கப்படவுள்ளதாக யாழ்.இலங்கை வங்கியின் மேற்தரக் கிளையினர் தெரிவித்துள்ளனர்.

இச் சுப நேரத்தில் சேமிப்புக் கணக்குகள், நடைமுறைக் கணக்குகள் நிலையான வைப்புக்கள் ஆகிய எல்லாவகையான கணக்குகளும் ஆரம்பிக்கலாம் எனவும் யாழ் இலங்கை வங்கியின் மேற்தரக் கிளையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் 15,000 ரூபாவுக்கு மேற்பட்ட வைப்புகளுக்கு சிறப்பு பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (பா)



யாழ். பிரதேச செயலக மகளிர் அபிவிருத்திப் பிரிவால் 2011 - சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாம் பரிசு ரூபா 2000 - சான்றிதழ் பெற்ற கவிதை

## எழும் ஞாயிறு

ஆடுவோம்! கவிதை பாடுவோம்!
    ஆணுக்குப் பெண்ணிங்கு சமனென்றே!
கூடுவோம்! உரிமை கோருவோம்!
    கொத்தடிமை நிலையைக் களைந்திட!

சட்டங்கள் செய்தனர் ஆண்களே!
    சமையல் கூடந்தான் பெண்ணென்று!
திட்டங்கள் போட்டே பெண்மையை
    திக்கெலாம் பூட்டியும் வைத்துளார்!

கல்வியில் பெண்ணின்று ஞாயிறாய்
    கதிர்விட்டு எழுந்தனள் கண்டீரே!
மெல்லியர் கட்டிலுக்கு மட்டுமாய்
    மேதினி வாழ்ந்ததும் பொய்த்ததாம்!

போதையை பெண்ணது மேனியில்
    போதித்துப் படுக்கைக்கு மட்டுமாய்:
வாதையைத் தந்தவர் நோக்கமும்
    வாய்க்காது என்றுலகே எழுவமே!

வீட்டடிமை விலங்காகப் பெண்களை
    விழ்த்தியும், மிதித்தும் நின்றவர்:
கூட்டத்தை சிந்திக்க வைத்திடும்
    கூர்மையைக் கல்வியால் அடைந்தனம்!

உழைப்புச் சக்தியாய் தலையெடுத்த
    உலகம் பெண்மையால் நிமிர்கிறது!
இழைத்த கொடுமை தனையுணர்ந்து
    இரக்கம் ஆண்மையும் அடைகின்றது!

கணனிக் கல்வியை முதற்கொண்டு
    கற்றுலகு மிளிரும் பெண்ணினமும்,
கணவன் எனும் பாழ் நாண்கயிற்றை
    கட்டிக் கொண்டுளது ஆணினமும்!

நவீன கல்விக் கொள்கையிலே
    நங்கையர் குலமும் மேலெழுந்தது,
அதீத கற்பனை உலகமதில்
    ஆண்கள் சிந்தனை மாழ்கின்றது!

இன்று படித்தவர் தொகையதிலே
    இலங்கும் முதன்மை பெண்களுக்கே!
நன்றே சிந்தனை சமமென்னும்
    நல்லுலகு படைக்க எழும் ஞாயிறு!

- மூலபாரதி -




வடமாகாண பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் சமாசத்தில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் மதுவரித்திணைக்கள அதிகாரிகள், சமாசத்தலைவர் ஆகியோர் கலந்துரையாடலில் ஈடுபட்டுடிருப்பதையும், கலந்து கொண்டவர்களையும் காணலாம்.

# யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு அதிகளவு பங்களிப்பு வழங்கி வருபவர் அமைச்சர் டக்ளஸ்

## யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

**யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு கல்விச் செயற்பாடுகளுக்கு அதிக பங்களிப்பு வழங்கி வருபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மட்டுமே என யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் தெரிவித்தார்.**

யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கணினி கூடங்கள் மற்றும் பல்லூடகத் தெறிகருவி திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாடசாலையின் பிரதான நுழைவாயிலிலிருந்து மாணவிகளின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் நிகழ்வின் பிரதம விருந்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட அதிதிகள் அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து தேசியக் கொடியும் பாடசாலைக் கொடியும் ஏற்றி வைக்கப்பட்டன.

பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்ட கணனிக் கூடங்கள் இரண்டையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாவை வெட்டித் திறந்து வைத்ததுடன் அவற்றினது செயற்பாடுகளையும் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். பல்லூடகத் தெறிகருவிக் கூடத்தை யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

அதிபர் திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில், யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு நேரடியாக விஜயம் செய்து, அந்தந்தப் பாடசாலைகளிலுள்ள பௌதீக மற்றும் குறைபாடுகள் தேவைகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றைச் சீர்செய்து வருகின்றார். இதன் மூலம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஆற்றி வருகின்ற கல்விப் பணிக்கு கல்விச் சமூகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது என்பதுடன் அவரது பணிகள் மென்மேலும் தொடர வேண்டும் என அவர் தெரிவித்தார்.

யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மாணவர் சங்கத் தலைவர் திருமதி மகேசன், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் சிதம்பரநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

புதிய கட்டிடத் தொகுதிக்கான முழுமையான செலவையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொறுப்பேற்றுக் கொண்டதுடன், அதன் ஆரம்ப கட்டமாக 10 இலட்சம் ரூபா காசோலையை பாடசாலை அதிபரிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரிக்கை

(வடமராட்சி)

அச்சுவேலி வைத்தியசாலையில் ஆளணிப்பற்றாக்குறையினால் நெருக்கடியான நிலையில் இயங்குவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலையில், ஆண்கள், பெண்களுக்கான விடுதி என்பன காணப்படுவதுடன் மகப்பேற்று விடுதி, நீரிழிவு மற்றும் நோயாளர்களுக்கான கிளினிக் சிகிச்சைகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், இவ்வைத்தியசாலையில் தற்போது இரண்டு வைத்தியர்கள் மட்டுமே சேவையாற்றி வருவதாகவும், தாதியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருந்தே சிகிச்சை பெற வேண்டிய நிலை காணப்படுவதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் நலன் கருதி சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

# எழுவைதீவில் காலாவதியான பொருட்கள் விற்பனையில்

(ஊர்காவற்றுறை)

எழுவைதீவுப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதியான குளிர்பானங்கள் மற்றும் பிஸ்கட் வகைகள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மனித பாவனைக்குதவாத பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதால், இது சம்பந்தமாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

# தேசிய பயிலுநர் அதிகார சபையின் புதிய கட்டடம் முள்ளியவளையில்

(துணுக்காய்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்திற்கு சுமார் 35 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாக கைத்தொழில் பயிற்சி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முள்ளியவளையில் அமைக்கப்படவுள்ள இக்கட்டட வேலைகளுக்கு உலக கனடிய பல்கலைக்கழக (வூஸ்) நிறுவனம் நிதி உதவி வழங்கவுள்ளதுடன் கட்டடத்தையும் அவர்களே அமைத்துக் கொடுக்கவுள்ளனர்.

தற்போது துணுக்காயில் இயங்கி வரும் இந்த அலுவலகம் எதிர்வரும் மே அல்லது யூன் மாதம் அளவில் புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இங்கு பயிற்சி பெறுவதற்குரிய இளைஞர், யுவதிகளைச் சேர்த்துக்கொள்வதில் பல சிரமங் களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

# ஆதினியின் இன்றைய பலன்

(10.04.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 27

இராகுகாலம் 4.36–6.06, சுபநேரம் 9.06 –10.36

ஸப்தமி பி.இ 1.17 திருவாதிரை, பி.இ 12.13

சித்தம் 5ஆம் தவக்கால ஞாயிறு

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– புகழப்படல், சன்மானம் கிடைத்தல், கொண்டாட்டம்.

ரிஷபம்:– மனக் குழப்பம், காரியத் தடங்கல், பணவிரயம்.

மிதுனம் :– சோம்பல் நிலை, காரியக் கேடு, தவறான எண்ணம்.

கடகம்:– நற்செய்திவரல், மனமகிழ்ச்சி, முயற்சி பலிதம்.

சிம்மம்:– காரியத்தடை, பொருள் இழப்பு, நண்பரால் தொல்லை.

கன்னி :– பாராட்டப்படல், தாய்வழி உதவி, தனச்சேர்க்கை.

துலாம் :– சோர்வானநிலை, அமைதியில் விருப்பு, தானதர்மச் செய்கை.

விருச்சிகம்:– காரியத்தடை, முரண்படல், வீண் கற்பனை.

தனுசு:– காரியசித்தி, பணவரவு, நண்பர் உதவி.

மகரம்:– விபத்து, பகைவரால் துன்பம், காரியங்கள் தோல்வி.

கும்பம் :– பொருட்சேர்க்கை, விருந்து பசாரம், பெண்வழியால் உதவி.

மீனம்:– நினைத்தகாரியச்சித்தி, பரிசு கிடைத்தல், பாராட்டப்படல்.

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு 12ஆம் திகதி நேர்முகப் பரீட்சை

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சித்திரம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சித்திரப் பாட ஆசிரியர் ஒருவர், ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளில் கற்பிப்பதாலேயே இந்த நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் முகமாக பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக வடமராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது. (100)

# வான் பகுதியை ஆழமாக்குமாறு வடமராட்சி மீனவர்கள் கோரிக்கை


(வடமராட்சி)

வடமராட்சி கடற்பகுதியில் படகுகள் கட்டும் வான் பகுதியை ஆழமாக்கித் தருமாறு கடற்தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொண்டைமானாறு பகுதியிலிருந்து பொலிகண்டி கடற்பகுதி வரை இந்த ஆழமாக்கல் வேலைகள் நடைபெற்று வந்தபோதிலும் பின்னர் அப்பகுதி வேலைகள் தடைப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மீதியாகவுள்ள கடற்பகுதியில் வான் பகுதி ஆழமாக்கப்படவில்லை. எனினும் பொலிகண்டியிலிருந்து தும்பளை கிழக்கு வரையான கடற்பகுதியை ஆழமாக்கித் தருமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது கடலின் கரையோரப் பகுதிகளில் கடல்நீரின் அளவு குறைவடைந்து இருப்பதால் இச்சமயத்தில் வான் பகுதியை ஆழமாக்குவது இலகுவானது என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (100)



**இலங்கை வங்கியின் சுன்னாகம்·மேற்தரக்கிளை முகாமையாளர் அரசகுமார் ஓய்வுபெற்றதை அடுத்து அவருக்கு வழங்கப்பட்ட தேநீர் விருந்துபசார நிகழ்வில் ஆறு திருமுருகன் உரையாற்றுவதையும், சுந்தர்சன் நிறுவன உரிமையாளர் செ. சிவகுமார் புதுமணத்தம்பதிகளுக்குத் தங்கநாணயம் வழங்குவதையும் காணலாம். (44)**

# க.பொ.த.சாதாரண தரம் விசேட சித்தி பெற்ற மாணவர்கள் ஜனாதிபதியால் கௌரவிப்பு



(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் க. பொ. த. சாதாரண தரத்தில் அதி விசேட சித்திபெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பதக்கம் மற்றும் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். அதிவிசேட சித்திபெற்ற மாணவர்களை கொழும்பு ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து அவர்களை ஜனாதிபதி கௌரவித்ததுடன், மக்கள் வங்கியால் அவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா பரிசும் வழங்கப்பட்டது.**

இந்நிகழ்வின்போது அம்மாணவர்களுக்கு 'டொங்கல்' ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் நாடளாவிய ரீதியில் அதிவிசேட சித்திபெற்ற 15 மாணவர்கள் மற்றும் மாவட்ட ரீதியில் சிறப்பு சித்திபெற்ற மாணவர்களில் மாவட்டத்துக்கு ஐந்து பேர் என தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, அம்பாறை, கண்டி, நுவரெலியா, மன்னார் மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் கலந்து கொண்டு ஜனாதிபதியிடம் கௌரவம் பெற்றனர். அதிவிசேட சித்திபெற்றோர் வரிசையில் கொழும்பு விசாகா மகளிர் கல்லூரி மாணவி டபிள்யூ.எச்.மதுரி யசோதா, குருநாகல் மலியதேவ கல்லூரி மாணவன் எம். ஆர். மொஹமட் அதிப் ஆகியோரும் மாவட்ட ரீதியான தெரிவில் மட்டக்களப்பு புனித சிஸிலியா கல்லூரி மாணவி பிரணவி வரதராஜன், யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சிவகுமார் மேகவரதன், கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவி சி.பானுப்பிரியா, மன்னார் மகாவித்தியாலய மாணவி ஏ.ஏ.பாத்திமா, முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தமிழ் வித்தியாலய மாணவர்கள் அமிர்தநாதன் பிரவீன், ஆறுமுகம் விதுனிகா, வவுனியா தமிழ் வித்தியாலய மாணவன் டி. திவாகரன் ஆகியோரும் ஜனாதிபதியிடமிருந்து பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர்.

## ஜூலையில் விவசாய வாரம்

(கொழும்பு)

தேசிய விவசாய வாரம் எதிர்வரும் ஜூலை மாதம் 20ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டிய விசேட நிகழ்வை வவுனியா விவசாயக் கல்லூரியில் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இது குறித்த விசேட கலந்துரையாடலொன்று அண்மையில் வவுனியாவில் இடம்பெற்றது.

தேசிய விவசாய வாரத்தை முன்னிட்டு விவசாயக் கண்காட்சி, விளையாட்டுப் போட்டி இடம்பெறவுள்ளதுடன், புதிய விவசாய முறை மற்றும் கிருமி நாசினியற்ற மரக்கறி தாயாரிப்புக் குறித்து பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படவுள்ளது.

# மனித உரிமைகள் காப்பக குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானவை; இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கைப் படையினரிடம் சரணடைந்த புலிகள் தலைவர்கள் காணாமற்போயுள்ளதாக நியுயோர்க்கைத் தளமாகக் கொண்ட மனிதஉரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்த குற்றச்சாட்டுகளை இலங்கை இராணுவப் பேச்சாளர் முற்றாக மறுத்துள்ளார்.

மனிதஉரிமைகள் கண்காணிப்பகத்தின் அத்தனை குற்றச்சாட்டுளும் பொய்யானவை.

போரின் இறுதியில் 11ஆயிரத்து 500 இற்கும் அதிகமான புலிகள் காவலில் வைக்கப்பட்டனர்.

அவர்களில் 60 வீதமானோர் விடுவிக்கப்பட்டு விட்டனர் என்று



இலங்கை இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல்ல தெரிவித்தார்.

போரின்முடிவில் இலங்கைப் படையினரிடம் சரணடைந்த புலிகளின் தலைவர்கள் சுமார் 20 பேர் வரையில் காணாமற் போயுள்ளதாகவும், அவர்கள் இலங்கைப் படையினரிடம் சரணடைந்த பின்னர் தனியாகக் கூட்டிச் செல்லப்பட்டதை நேரில்கண்ட சாட்சியங்கள் இருப்பதாகவும் மனிதஉரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்திருந்தது.

அத்துடன் இலங்கைப் படைகளால் மோதலில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட, புலிகளின் தளபதி ரமேஷை, படையினர் தடுத்து வைத்து விசாரிக்கும் காணொளியையும் மனிதஉரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டிருந்தது.

எனினும் இந்தக் காணொளிப் பதிவு தொடர்பாக இலங்கை இராணுவப் பேச்சாளர் கருத்து எதையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ரிஸானாவை விடுதலை செய்யுமாறு ஆசிய மனித உரிமை ஆணையகம் கோரிக்கை



(கொழும்பு)

இலங்கைப் பணிப்பெண் ரிஸானா நபீக்கை விடுதலை செய்யுமாறு ஹொங்கொங்கை தலைமையகமாகக் கொண்ட ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் கோரிக்கை விடுத்துள்ளது.

சவுதிஅரேபிய மன்னரிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு சவுதி அரேபியாவில் பணிபுரிந்த வீட்டில் உள்ள குழந்தையைக் கொலை செய்ததாக ரிஸானா நபீக் மீது குற்றம் சுமத்தப்பட்டு அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அதன் பின்னர் இலங்கை ஜனாதிபதி உள்ளிட்ட பல தரப்பினர் விடுத்த கோரிக்கையை அடுத்து ரிஸானா நபீக்கின் மரண தண்டனையை தற்காலிகமாக ஒத்திவைக்க சவுதிஅரேபிய மன்னர் தீர்மானித்தார்.

இந்த நிலையில் பணிப்பெண்ணாகச் சென்றிருந்த ரிஸானா நபீக்கிற்கு வீட்டுப் பணிப்பெண் தொழிலில் அனுபவம் இருந்திருக்கவில்லை எனவும் குழந்தையைக் கொலை செய்ய அவருக்கு எவ்வித அடிப்படைக் காரணங்களும் இல்லை எனவும் ஆசிய மனித உரிமைகள் ஆணையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பசில் பெர்னாண்டோ அரேபிய செய்திச் சேவை ஒன்றிற்குத் தொலைபேசி ஊடாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ரிஸானா நபீக்குடன் உரையாடி பல மாதங்கள் கழிந்துள்ளதாகவும் அவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவருடைய பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் பசில் பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

# சன் சீ கப்பல் ஆட்கடத்தல்காரரை நாடு கடத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

எம்.வி.சன்.சீ கப்பலில் பிரிட்டிஷ் கொலம்பியா ஊடாக கனடாவைச் சென்றடைந்த 492 இலங்கை அகதிகளில் ஆட்கடத்தல்காரர் ஒருவரும் இருந்துள்ளதாக கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் சபை தெரிவித்துள்ளது.



குறித்த நபர் தொடர்பில் இடம்பெற்ற விசாரணைகளின்போது அவரை நாடு கடத்துமாறு குடிவரவு மற்றும் அகதிகள் சபையின் சட்டத்தரணி கெனி நிக்கலொவ் வலியுறுத்தியுள்ளார்.


எம்.வி.சன்.சீ கப்பலில் தாய்லாந்திலிருந்து கனடா வரையான பயணத்திற்கு ஒழுங்கு செய்த 12 பேரில் தானும் ஒருவர் என்பதை குறித்த நபர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஆட்கடத்தலுக்கு முக்கிய நபர்களின் பங்களிப்பு இருந்திராவிடின் இது சாத்தியப்பட்டிருக்காது என அகதிகள் சபை சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

எம்.வி.சன்.சீ கப்பல் பயணத்தைத் தான் ஒழுங்கு செய்யவில்லை எனவும் பயணத்திற்கான 35ஆயிரம் டொலர்களை செலுத்த முடியாமையினாலேயே அக்குழுவில் பணியாற்றியதாகவும் குறித்த சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்கடத்தல் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். எம்.வி.சன்.சீ கப்பலில் நூற்றுக்கணக்கானோர் பயணிக்கிறார்கள் என்பதை அறிந்திருந்தமையானது சந்தேகநபருக்கும் ஆட்கடத்தலுக்கும் தொடர்பிருப்பதை உறுதிப்படுத்துவதாக அகதிகள் சபை சட்டத்தரணி கூறியுள்ளார்.

# விக்கிலீக்ஸ் உரிமையாளர் இலங்கையில் இருந்திருந்தால் சாம்பலும் மிஞ்சியிருக்காது; சுனில் ஹந்துன்நெத்தி




(கொழும்பு)

விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் உரிமையாளர் இலங்கையில் இருந்திருந்தால் அவரது சாம்பலும் மிஞ்சியிருக்காது என ஜனநாயக தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புப் பிரேரணைமீது உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகத்துறை மீதான தாக்குதல்கள் தொடர்பாக நாடாளுமன்றத்திலும் தணிக்கையுடனேயே உரையாற்றும் நிலைமை உருவாகியுள்ளது. இணையத்தளங்களை தணிக்கை செய்ய முடியுமென நீங்கள் நினைக்கின்றீர்களா? என்று நாடாளுமன்றத்தில் சுனில் ஹந்துன்நெத்தி கேள்வி எழுப்பினார்.

விக்கிலீக்ஸ் இணையத்தளம் இலங்கையில் இருந்திருந்தால் உரிமையாளரின்சாம்பலும் மிஞ்சியிருக்காது. உலகிலேயே கொடூரமான பயங்கரவாதிகளை ஒழித்த இராணுவம், பொலிஸ், உளவுப் பிரிவினர் எம்மிடம் உள்ளனர். அப்படியெனில் ஏன் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாது.

குற்றங்களை மறைக்க, மறைக்க அது மேலும் மேலும் வெளிவரும் என சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்தார்.

## நிர்ப்பந்தம் கொடுக்கமாட்டேன்

(மும்பை)

எனது மகனைக் கிரிக்கெட் வீரராக உருவாக வேண்டும் என்று நான் நிர்ப்பந்திக்க மாட்டேன். அவர் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ? அதனைத் தேர்வு செய்து கொள்ளலாம் என நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: 1983ஆம் ஆண்டில் இந்திய கிரிக்கெட் அணி உலகக் கிண்ணத்தை வென்றதன் மூலம் எனக்குக் கிரிக்கெட் மீதான ஆர்வம் அதிகரித்தது. சமீபத்தில் மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி உலகக் கிண்ணத்தை மீண்டும் கைப்பற்றியதைப் பார்த்த எனது மகன் அர்ஜுனுக்கு மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

உலகக் கிண்ண வெற்றிக்கு பின்னர் நான் வீட்டுக்குத் திரும்புகையில் எனது




தாயார் மிகவும் உணர்ச்சி பொங்கக் காணப்பட்டார். ஆராத்தி எடுத்து வரவேற்ற அவரது கண்களில் ஆனந்தக் கண்ணீரைக் காண முடிந்தது. போட்டி முடிந்து விடுதிக்குத் திரும்பிய போது அங்கு பெருந்திரளாக கூடியிருந்த ரசிகர்கள் கையசைத்து வெற்றி மகிழ்ச்சியைக் கொண்டாடினார்கள். இதற்கு முன்பு இதுபோன்ற ஆரவாரத்தை நான் பார்த்ததில்லை என்றார்.

## மற்றொருவரும் பாராட்டு



(கராச்சி)

உலகக் கிண்ணத்தை இந்தியா வெல்ல டோனியின் தலைமை தான் காரணம். வீரர்களைத் தேர்வு செய்வதில் அவர் கையாண்ட விதம் சிறப்பானது என பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் ரமீஸ்ராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: சினிமாப் படத்துக்கு ஏற்ற நட்சத்திரங்களை இயக்குநர் தேர்வு செய்வார். ஒரு இயக்குனர் போலவே டோனியும் வீரர்களைத் தேர்வு செய்துள்ளார். வீரர்கள் தேர்வு, முடிவில் அவர் எடுத்த துணிச்சல், கிண்ணத்தை வெல்லக் காரணமாக இருந்தது.

அஸ்வினுக்கு 2 ஆட்டத்தில் வாய்ப்புக் கொடுத்தார். பாகிஸ்தானுக்கு எதிரான அரையிறுதியில் அவருக்குப் பதிலாக நெஹ்ரா சேர்க்கப்பட்டார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் நெஹ்ரா மோசமாகப் பந்து வீசியதால் அவரது தேர்வை விமர்சனம் செய்தார்கள். ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருந்ததால் அவர் துணிச்சலாக நெஹ்ராவைத் தேர்வு செய்தார்.

அதற்கு ஏற்றவாறு அவரும் சிறப்பாக வீசினார். இதே போல யூசுப்பதான் லீக் ஆட்டங்களில் சரியாக ஆடாததால் ரெய்னாவுக்கு வாய்ப்புக் கொடுத்தார். அவர் தனது முடிவுப்படி வீரர்களைத் தேர்வு செய்கிறார். டெண்டுல்கர், சேவாக்கிடம் அவர் தனது எல்லையைத் தாண்டிப் பேசமாட்டார் என்றார்.

## முன்னேற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கால்பந்தாட்ட சங்கம் யாழ்ப்பாணக் கழகங்களுக்கிடையே நடாத்தும் கொல்சிம் எபேக்கப் 2011 சுற்றுப் போட்டிகளில் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் வதிரி டயமன்ஸ் அணியும், குருநகர் சிபிஸ்க் அணியும் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (மி)




## 60 ஓட்டங்களால் அவுஸ்ரேலிய அணி வெற்றி

(டாக்கா)


பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 60 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

பங்களாதேஷிற்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள அவுஸ்ரேலிய அணி, ஒரு நாள் போட்டித் தொடர் மற்றும் டெஸ்ட், ரி-20 போட்டிகளில் ஆடவுள்ளது. இந்நிலையில் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடர் முதல் ஆட்டம் நேற்று டாக்கா மைதானத்தில் பகல் ஆட்டமாக நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித் தலைவர் மைக்கல் கிளார்க் 111 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்சர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 101 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் வொட்சன் 37, பொண்டிங் 34, மைக் ஹசி 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுவே மூன்று, எம். மெக்ரசா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 271 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்று, 60 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் தமீம் இக்பால் 62, சஹிப் அல் ஹசன் 51 ஓட்டங்களைப் பெற்றனர். ஆட்டமிழக்காது ரஹிம் 44 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிரெட்லீ, ஜோன்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக மைக்கல் கிளார்க் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் அவுஸ்ரேலிய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.




## நிரூபிக்க வேண்டிய நிர்ப்பந்தம்

(புதுடில்லி)

ஒவ்வொரு கிரிக்கெட் வீரர் வாழ்விலும் தன்னை நிரூபிக்க வேண்டிய காலக்கட்டம் வரும். இப்போது அந்தக் காலக்கட்டத்தில் நான் இருக்கிறேன். இந்த ஐ.பி.எல். தொடரில் என்னை நிரூபித்து மீண்டும் இந்திய அணியில் நுழைவேன் என வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் ஷர்மா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் எனது பந்து வீச்சை மேம்படுத்தியுள்ளேன். சற்றே வேறு வேறான பந்துகளை வீசப் பயிற்சி எடுத்துள்ளேன், அதனை இந்த ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் வீசுவேன். வேகத்தை சற்றே குறைத்து வீசும் யோர்க்கர்களை பயின்றுள்ளேன். கடந்த ஆகஸ்ட் 2009 இற்குப் பின்னர் இந்திய ஒரு நாள் கிரிக்கெட் அணியில் நான் இடம்பெறவில்லை என்பது ஏமாற்றமான விடயம் தான்.



உலகக் கிண்ண கிரிக்கெட்டில் சாகீர் கான் வீசியது போல் அதிகமாக பல் வேறு பந்துகளை வீசாமல் எளிதாக வைத்துக் கொள்வது அவசியம் என்பதை உணர்நதுள்ளேன் என்றார்.


## இடம்பிடிக்க முயற்சிப்பேன்

(புதுடில்லி)


நான்காவது ஐ.பி.எல் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, இந்திய அணியில் இடம் பிடிக்க முயற்சிப்பேன் என கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் அபிஷேக் நாயர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது: கடந்த மூன்று தொடர்களில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடினேன். இம்முறை கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக விளையாட உள்ளேன். முன்னதாக எங்கள் அணியில் இருந்த யுவராஜ் சிங், சங்கக்கார, மஹேல ஜெயவர்தனா உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் இம்முறை வேறு அணிகளுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் வெற்றிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஏனெனில் அணியில் திறமை




யான இளம் மற்றும் அனுபவ வீரர்கள் நிறைந்துள்ளனர். கடந்த தொடர்களில் சந்தித்த தோல்விகளை மறந்து இம்முறை பஞ்சாப் அணி சாதிக்க முயற்சிக்கும் என்றார்.





சுதந்திர சதுக்கத்தில் நேற்று மாலை ஒன்று திரண்ட இலங்கை அணியின் தீவிர கிரிக்கெட் ரசிகர்கள் பலர், குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜெயவர்த்தன இருவரையும் பதவிகளை மீண்டும் ஏற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதனைக் காணலாம்.

## சென்னை த்ரில் வெற்றி



(சென்னை)

ஐ.பி.எல்., தொடரின் முதல் போட்டியிலேயே சென்னை சூப்பர் கிங்ஸ் அணி இரண்டு ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நான்காவது ஐ.பி.எல்., ரி-20 தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது. சென்னை - சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த முதல் லீக் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை எதிர்கொண்டது. நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது.

இதில். சென்னை அணி 20 ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அனிருதா 64 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய கொல்கத்தா அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 151 ஓட்டங்களைப் பெற்று இரண்டு ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் கலிஸ் 54 ஓட்டங்களைப் பெற்றார்.

# சிரியாவில் மக்கள் போராட்டத்தை நசுக்க இராணுவம் சுட்டதில் 20பேர் பலி



(சிரியா)

**சிரியாவில் 11 ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வரும் அதிபர் பஷார் அல்-ஆசாத்துக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் முதல் பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதைத் தொடர்ந்து அரசியல் சட்டத்தை மறு சீரமைப்புச் செய்வதாக அவர் அறிவித்துள்ளார். ஆனால் அதை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.**

இதைத் தொடர்ந்து போராட்டக்காரர்களை ஒடுக்க ராணுவத்தினரும், பொலிசாரும் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதில் 20 பேர் பலியானார்கள். அவர்களில் பெரும் பாலானவர்கள் டாரா நகரில் தான் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அங்கு மட்டும் 16பேர் உயிரிழந்துள்ளனர். டமாஸ் கஸ்சில் 3 பேரும், ஹோம்ஸ் நகரில் ஒருவரும் பலியாகியுள்ளனர்.

இத் தகவலை சிரியா தேசிய மனித உரிமை அமைப்பின் தலைவர் அம்மர் குராபி தெரிவித்துள்ளார். ஆனால் நேற்று முன்தினம் நடந்த வன்முறைக்கு 2 பேர் மட்டுமே பலியானதாக அரசு தெரிவித்துள்ளது. துப்பாக்கிச் சூட்டில் 100க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 3வாரத்தில் மட்டும் போராட்டத்தில் ஈடுபட்ட 170பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என அமெரிக்க அதிபர் ஒபாமா சிரியா அரசை வலியுறுத் தியுள்ளார். மேலும் இச்சம்பவத்துக்கு கண்டனமும் தெரிவித்துள்ளார்.

எனவே அவர்களின் போராட்டத்தை ஒடுக்க அதிபர் ஆசாத் ராணுவத்தையும், பொலிசையும் பயன்படுத்தி வருகிறார். எனவே போராட்டம் கலவரமாக மாறியுள்ளது. இதற்கிடையே நேற்றுமுன்தினம் சிரியாவில் டாரா,டமாஸ்கஸ்,ஹராஸ்தா, ஹோம்ஸ் உள்ளிட்ட நகரங்களில் ஆங்காங்கே போராட்டங்கள் நடந்தது. வீதிகளில் திரண்ட லட்சக்கணக்கான மக்கள் அதிபருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

## நைஜீரியாவுக்கு புதிய பிரதமர்

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் யுரேனியம் அதிக அளவில் உள்ளது. அந்த நாட்டில் கடந்த ஆண்டு முதல் நீடித்த ராணுவப் புரட்சியில் முன்னாள் அதிபர் மமதோ தண்ட்ஜா பதவி இழந்தார்.

அதைத் தொடர்ந்து, புதிய அதிபராக கடந்த வியாழனன்று மகமதோ இசபோ பதவி ஏற்றார். இந்த நிலையில், நாட்டின் புதிய பிரதமராக முன்னாள் மந்திரி பிரிகி ராபினி என்பவரை இசபோ நியமித்துள்ளார்.

நைஜீரியாவின் வட பகுதியில் உள்ள முக்கிய இனமான தவுரெக் இனத்தைச் சேர்ந்த ராபினி, இசபோ கட்சியின் மூத்த தலைவர் ஆவார். அணு மூலப் பொருளான யுரேனியத்தை எடுப்பதற்காக நைஜீரியாவில் பிரான்சு உள்ளிட்ட நாடுகள் கோடிக்கணக்கில் முதலீடு செய்துள்ளன. எனினும், இன்னமும் வளர்ச்சியடையாத நாடாகவே அது இருந்து வருகிறது.

## இங்கிலாந்து நீர்மூழ்கிக் கப்பலில் துப்பாக்கிச் சண்டை; ஒருவர் பலி

(லண்டன்)

இங்கிலாந்தின் கப்பல்படையை சேர்ந்த நீர்மூழ்கி கப்பல் ஊழியர்கள் நடத்திய துப்பாக்கி சண்டையில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயத்துடன் சிகிச்சைபெற்று வருகிறார். இச்சம்பவம் குறித்து சவுத்தாம்ப்டன் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நீர்மூழ்கி கப்பல் அணுமின் சக்தி அடிப்படையில் இயங்கக் கூடியது. 7ஆயிரத்து 500 தொன் எடை கொண்டு ஒரு பில்லியன் பவுண்டு செலவில் கட்டப்பட்ட இந்த கப்பலில் 98பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்தக்கப்பல் பள்ளிக் குழந்தைகள் மற்றும் பொதுமக்களின்பார்வைக்காக நிறுத்திவைக்கப்படுகிறது. சம்பவத்தன்று சவுத்தாம்ப்டன் நகருக்கு வந்த இந்தக் கப்பலில் மேற்கண்ட சம்பவம நடைபெற்றது. இச்சம்பவத்தால் பொதுமக்கள் யாரும் காயமடையவில்லை என்றும், இது தனிப்பட்ட முறைத் தாக்குதல் என்றும்தீவிரவாத குழுக்களுக்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லைஎனவும், இது குறித்துபாதுகாப்புத்துறை பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர் என்று பாதுகாப்புத்துறை செய்தித்தொடர்பாளர் கூறியுள்ளார்.

# 20,000 பவுண்கள் செலவழித்து நடாத்திய நாய்த் திருமணம்

(பிரிட்டன்)

பிரிட்டனின் எஸக்ஸ் பிராந்தியத்தில் 20 ஆயிரம் பவுண்கள் செலவில் இரண்டு நாய்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பெண் நாயின் சொந்தக் காரியான 32 வயதான லூயிஸ் ஹாரிஸ் தான் தனது செல்லப்பிராணிக்கு இந்தத் திருமணத்தை திட்டமிட்டு முன்னின்று நடத்தியுள்ளார்.

இவரின் நாய்க்கு ஆறு வயதாகின்றது. பெயர் லோலா. பேஸ்புக் மூலம் நடத்தப்பட்ட போட்டியில் இந்த நாய்க்கான ஜோடி தெரிவு செய்யப்பட்டது.

இந்தப் பெண்மணி நாய்களுக்கான அலங்கார நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றார். இந்தத் திருமணம் நடத்தப்பட்ட அரங்கிற்கான கட்டணம் மட்டும் 2500 பவுண்களாகும்.

80 விருந்தாளிகள் இதில் கலந்து கொண்டனர். திருமணமான இந்த நாய்க்கு நான்கு வயதிலும் இரண்டு வயதிலும் இரண்டு சகோதரி நாய்கள் உள்ளன. அவை இரண்டும் இந்த நாயை அண்டுவதில்லை. எனவே இது தனிமைப்பட்டது.

இந்தத் தனிமையைப் போக்குவதற்குத்தான் எஜமானி பேஸ்புக் மூலம் தேர்வு நடத்தி தக்க துணையைத் தெரிவு செய்து பிரமாதமாக திருமணத்தையும் நடத்தி முடித்துள்ளார்.

2005ல் பிரிட்டனின் அசிங்கமான நாய் எனத்தெரிவு செய்யப்பட்ட நாய்க்குதான் இந்த மாப்பிள்ளை அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது.

வந்து சேர்ந்த நூற்றுக்கணக்கான விண்ணப்பங்களில் இருந்து ஆறு நாய்கள் இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டு அதில் இருந்து கடைசியாகத் தான் இந்த மாப்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார்.

இந்தத் திருமண வைபவத்தில் பேசிய எஜமானி கடந்த ஆறு வருட காலத்தில் தனது செல்லப்பிராணிகள் மூன்றுக்கும் 101680 பவுண்களைச் செலவிட்டுள்ளதாகக் கூறினார்.

மணப்பெண் நாய்க்கான ஆடையை அதற்கான விஷேட வடிவமைப்பாளர் ஒருவர் வடிவமைத்துள்ளார். 1600 பவுண்கள் செலவில் இந்த ஆடை வடிவமைக்கப்பட்டுள்ளது.




# பாகிஸ்தான் நடத்திய இராணுவ தாக்குதலில் 50பேர் பலி

(பாகிஸ்தான்)

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டி உள்ள பழங்குடியினர் பகுதியில் தலிபான்கள் பதுங்கி இருப்பதாக தகவல் கிடைத்தது. இதையடுத்து சுரன் தாரா, மொசாகெல், பகதர் கல்லே, மதாய், சின்வாரி என எல்லை நெடுகிலும் பதுங்கி இருந்த தலிபான்கள் மீது பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியது. தரைப்படையின் டாங்கிகள் மற்றும் பீரங்கிகள் தாக்குதல் நடத்திய அதே சமயத்தில், வான்வழியாகவும் போர் விமானங்களும் ஹெலிகாப்டர்களும் குண்டுகளை வீசின.

இந்த இருமுனைத் தாக்குதல் காரணமாக, தலிபான்கள் 50 பேர் கொல்லப்பட்டனர். தலிபான் தரப்பில் கடும்சேதம் ஏற்பட்டதை தலிபான் செய்தித் தொடர்பாளர் சஜ்ஜாத் முகமது உறுதிசெய்தார். அதே நேரத்தில், ராணுவதரப்பில் 4 பேர் பலியாகினர். 8பேர் காயமடைந்தனர்.

இதற்கிடையே, பீரங்கிக் குண்டு தவறுதலாகப் பாய்ந்து சென்று தாக்கியதில் ரஹ்மத் கோர் பகுதியைச் சேர்ந்த ஒரு சிறுவன் உயிரிழந்தான். இரண்டு பேர் காயமடைந்தனர்.

# ஆட்கடத்தல்காரர்களுக்கு எதிராக புதிய சட்டம் கொண்டுவர இந்தோனேசியா நடவடிக்கை

(இந்தோனேசியா)

சட்டவிரோத ஆட்கடத்தல்களை மேற்கொள்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக புதிய சட்டமொன்றை உருவாக்கவுள்ளதாக இந்தோனேசியா தெரிவித்துள்ளது.

இதுதொடர்பிலான ஒப்பந்தமொன்றில கைச்சாத்திட இந்தோனேசிய ஜனாதிபதி சுசிலோ பம்பாங் யுதோயோனோ தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத ஆட்கடத்தல்களுக்கு எதிராக புதிதாக கொண்டுவரப்படவுள்ள சட்டத்தின் அடிப்படையில் ஆட்கடத்தல் தொடர்பில் கைது செய்யப்படும் குற்றவாளிகளுக்கு 15 வருட சிறைத்தண்டனை வழங்கப்படும்.

மற்றும் ஆட்கடத்தலுக்கு தூண்டுதலாக இருந்து லஞ்சம் பெறுபவர்களுக்கு 5 வருட சிறைத்தண்டனையும், கடத்தப்படுபவர்களுக்கு ஒரு இலட்சத்து 70 ஆயிரம் டொலர் தண்டப் பணமும் தண்டனையாக விதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சட்டமானது அவுஸ்ரேலியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கு நன்மையாக அமையவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை, ஆப்கானிஸ்தான், ஈரான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் அதிக சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாக இந்தோனேசிய இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

# பயங்கர புழுதிக்காற்று டிரக்குகள்,கார்களும் மோதின 8பேர் பலி,60பேர் காயம்

(ஜேர்மனி)

கண்ணை மறைக்கும் பயங்கர புழுதிக் காற்று காரணமாக வடகிழக்கு ஜேர்மனியில் பெரும் விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். 60 பேர் காயமடைந்தனர்.

வடகிழக்கு ஜேர்மனியின் கடலோர நகரமான ரோஸ்டாக் பகுதியில் ஏற்பட்ட திடீர் புழுதிக் காற்று வாகன ஓட்டிகளின் கண்ணை மறைத்தது. அதனால் வடக்கு ஜேர்மனியின் நெடுஞ்சாலையில் பெரும் விபத்து ஏற்பட்டது.

டிரக்குகளும் கார்களும் எதிர்த் திசையில் மோதிக் கொண்டன. இந்த விபத்தில் 17 கார்கள் மற்றும் 3 டிரக்குகள் தீப் பிடித்து எரிந்தன. விபத்தில் 40-50 வாகனங்கள் சிக்கின என்று பொலிசார் தெரிவித்தனர். இந்த விபத்தில் அபாயகரமான பொருட்கள் எடுத்துச் செல்லும் வாகனமும் சிக்கிக் கொண்டது.

பல வாகனங்களின் தொடர் விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். 60 பேர் காயம் அடைந்தனர். படுகாயம் அடைந்த 27 பேர் அருகாமையில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டனர். பல டிரைவர்கள் தங்களது காருக்குள்ளேயே சிக்கிக் கொண்டனர்.

இந்த விபத்துக் குறித்து பொலிஸ் பெண் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,மெக்லன் பார்க் பகுதியில் ஏற்பட்ட பயங்கர விபத்து இதுவாகும் என்றார்.

நிகழ்விடத்திற்கு தீயணைப்புத் துறையினர், அவசர மீட்புக் குழுவினர் மற்றும் பொலிசார், விரைந்தனர். சூறைக்காற்றால் ஏற்பட்ட மோசமான வெளிச்சத்தால் ஹெலிகொப்டர்கள் நிகழ்விடத்தில் தரை இறங்க முடியவில்லை.

# அமெரிக்காவில் விபசார வழக்கில் ஒபாமாவின் நண்பர் கைது!

(அமெரிக்கா)

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் நண்பர் ராபர்ட் பாபி டிட்காம்ப் (49). இவர் ஹோனோலூலு நகருக்கு 4 பேருடன் சென்று இருந்தார். அங்கு அவர்கள் ஒரு பெண்ணை விபசாரத்துக்கு அழைத்தனர். இதுபற்றித் தகவல் அறிந்த பொலிஸார் அங்கு சென்று விசாரணை நடத்தினர். பின்னர் டிட்காம்ப் உள்பட 4 பேரையும் கைது செய்தனர். பின்னர் அவர்கள் தலா ரூ.25 ஆயிரம் தனிநபர் ஜாமீனில் விடப்பட்டனர். டிட்காம்ப் அதிபர் ஒபாமாவின் நெருங்கிய நண்பர்களில் ஒருவர். இவர்கள் இருவரும் ஹோனோ லூலுவில் உள்ள ஒரு பள்ளியில் கடந்த 1970ஆம் ஆண்டு முதல் ஒன்றாகப் படித்தவர்கள்.

இவர்கள் இருவரும் குடும்ப நண்பர்கள் ஆவர். கோல்ப், கூடைப்பந்து போன்ற விளையாட்டுகளை இருவரும் ஒன்றாகச் சேர்ந்து விளையாடுவார்கள். கிறிஸ்துமஸ், புத்தாண்டு உள்ளிட்ட விடுமுறை நாட்களை இருவரும் தங்கள் குடும்பத்தினரோடு கழிப்பார்கள் என அறிய வருகிறது.

# கலைஞர் மீண்டும் முதல்வராக வர ஆதரவுதாருங்கள் - மு.க ஸ்டாலின்

(வேலூர்)

**துணை முதல்வர் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்றுமுன்தினம் வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டங்களில் பேசினார். வேலூர் பழைய பஸ் நிலையத்தில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஞானசேகரனுக்கு ஆதரவு கேட்டுப் பேசியபோது அவர் கூறியதாவது:-**

வருகிற 13ஆம் திகதி நடைபெற இருக்கும் தமிழக சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் கலைஞர் முதல் அமைச்சராகப் பொறுப்பு ஏற்றிட நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று வாக்குக் கேட்டு வந்துள்ளோம். சில கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள், தேர்தல் நேரத்தில் மட்டும் வருவார்கள், வானத்தை வில்லாக வளைப்பேன், வைகுண்டத்தை காட்டுவேன், மணலைக் கயிறாக திரிப்பேன் என்றெல்லாம் கூறுவார்கள். தேர்தல் வந்தால் தமிழ்நாடு, இல்லாவிட்டால் கொடநாடு எனவும் இருப்பார்கள்.

இப்போது அவருக்கு சரியான ஜோடி கிடைத்துள்ளார். அவர் யார்? என்று உங்களுக்குத் தெரியும். திரைப்படத்தில் கதாநாயகனாக வலம் வந்தார். அரசியலில் வில்லனாக மாறி, தற்போது காமெடியனாகி விட்டவர், தன் கட்சிக்காரரையே, வேட்பாளரையே அடித்தார். மறுநாள் அவருக்கு கொடிப்பிரச்சினை வந்ததும், அதுவும் கூட்டணி தலைமையிலான அ.தி.மு.க. கொடிப் பிரச்சினை. முதல்நாள் அடி, மறுநாள் கொடி, அடுத்தநாள் குடி என்று அரசியலைக் கொச்சப்படுத்தி அசிங்கப்படுத்தி வருகிறார்.

வேலூரில் பல ஆண்டுகளாக இருந்த குடிநீர் பிரச்சினையைப் போக்கிட ரூ. ஆயிரத்து 295 கோடியில் ஒக்கேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த விழாவுக்கு நான் தான் வந்தேன். அவர் மீண்டும் வேட்பாளராக வந்துள்ளார். அவர்




சிறப்பான வெற்றியைப் பெற்றிட கை சின்னத்தில் வாக்களிக்க வேண்டுகிறேன். நமது கலைஞர் கடந்த தேர்தலின் போது சொல்லியதை எல்லாம் நிறைவேற்றியுள்ளார். என அவர் மேலும் தெரிவித்தார்.

# சாயிபாபாவுக்கு மேலும் 2 நாட்களுக்கு செயற்கை சுவாசம், டாக்டர்கள் முடிவு

(புதுடில்லி)

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் ஆசிரமம் அமைத்து ஆன்மீக பணியில் ஈடுபட்டு வரும் சத்யசாய்பாபா (85). மூச்சுத்திணறல் காரணமாக கடந்த மாதம் 28ஆம் திகதி அங்குள்ள சிறிசத்யசாய் சூப்பர் ஸ்பெஷலிட்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று 13ஆவது நாளாக அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக அவரது உடல்நிலை தேறியதுடன் சிறுநீரகம் நன்றாக இயங்கத் தொடங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதுபற்றி ஆஸ்பத்திரி இயக்குனர் டாக்டர் சபயா கூறும்போது, சாய்பாபா



வின் அனைத்து உறுப்புகளும் நன்றாக இயங்குகிறது.

சிறுநீரக செயல்பாடும் நல்ல நிலையில் உள்ளது. அவருக்கு அவ்வப்போது மூச்சுத் திணறல் ஏற்படுகிறது. இதனால் அவருக்கு மேலும் 2 நாட்கள் செயற்கைச் சுவாசம் அளிக்க முடிவு செய்துள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழக சட்டமன்றத் தேர்தலில் பணத்தை கட்டுப்படுத்த ஆணையகம் நடவடிக்கை!

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(புதுடில்லி)

தேர்தலில் முறைகேடுகள் நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ்.வை.குரேஷி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் தேர்தல் நடத்தும் பணி சவாலானது என்று கூறியிருக்கும் அவர், அவசரச் சட்ட காலத்தைப் போன்ற நிலை இருப்பதாக தி.மு.க, பா.ம.க ஆகிய கட்சிகள் கூறியிருக்கும் குற்றச்சாட்டை மறுத்தார்.

டில்லியில் செய்தியாளர்களிடம் இது தொடர்பாக அவர் மேலும் கூறியது:

5 மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களில் அதிலும் முக்கியமாக தமிழகத்தில் பணபலம் பயன்படுத்தப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் வாக்காளர்களுக்குப் பணம் கொடுக்க பல இடங்களில் முயற்சிகள் நடந்திருக்கின்றன.

இதுவரை இல்லாத அளவுக்கு மிகவும் கடுமையான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் மூலம் ரூ.53 கோடி அளவுக்கு கணக்கில் வராத பணத்தை அதிகாரிகள் கைப்பற்றியிருக்கின்றனர். தமிழ்நாட்டில் மட்டும் ரூ.42 கோடி பிடிபட்டிருக்கிறது.

அதிகார வரம்பை மீறி தேர்தல் ஆணையம் செயல்படுவதாகக் கூறப்படுவது தவறானது. அரசியல் சட்டம் அளித்திருக்கும் அதிகார வரம்புக்குள் தான் நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

தேர்தலை நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடத்துவது தான் எல்லாவற்றிலும் முதன்மையானது. தேர்தல் அமைதியாகவும் வெளிப்படையாகவும் அனைவரும் பங்கேற்பதாகவும் அமைய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

தேர்தலில் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடைமுறைகளை அமுல்படுத்தியிருக்கிறோம். தமிழகத்தில் தேர்தல் நடத்தும் பணி மிகவும் சவாலானது. ஆனாலும் எந்தத் தவறும் நடந்துவிடக் கூடாது என்கிற வகையில், முடிந்தவரை சிறப்பாகச் செயற்பட்டு வருகிறோம்.

தேர்தலில் அளவுக்கு மீறி செலவு செய்யப்படுவதைத் தடுப்பது மட்டும் தேர்தல் ஆணைய நடவடிக்கைகளின் நோக்கமல்ல. வாக்காளர்களுக்கு தரப்படுவதற்காக வைக்கப்பட்டிருக்கும் கணக்கில் வராத பணம், பரிசுப் பொருள்கள், மதுபானங்களைக் கைப்பற்றுவதும் எங்களுடைய பணியாக இருக்கிறது.

தேர்தலில் நடைமுறைப்படுத்தப்படும் புதிய நடத்தை விதிமுறைகள் குறித்து அனைத்து அரசியல் கட்சிகளும் கலந்து கொண்ட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால், எந்த மாதிரியான நடவடிக்கைகள் இருக்கும் என்பது




கட்சிகளுக்கு முன்பே தெரிந்ததுதான். கட்சிகள் கேட்டுக் கொண்டபடிதான் புதிய விதிமுறைகள் வகுக்கப்பட்டன. இப்போது குற்றம்சாட்டுவது நியாயமற்றது.

தேர்தலில் பணபலம் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதை எதிர்த்து தேர்தல் ஆணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு இருக்கிறது. கட்சிகளும் முழு ஒத்துழைப்புத் தர வேண்டும்.

தமிழகம் மட்டுமல்லாமல், தேர்தல் நடக்கும் மற்ற மாநிலங்களிலும் தேர்தல் ஆணையம் கடுமையான நடவடிக்கைளை எடுத்து வருகிறது. தமிழ்நாட்டில் செலவுகளைக் கட்டுப்படுத்தும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மட்டும் தீவிரமாக நடந்து வருகின்றன என்றும் கூறினார்.


# வாக்குப் போட பணம் கொடுத்தாலும் வாங்கினாலும்,ஒருவருட சிறைத்தண்டனை

(சென்னை)

நடைபெறவுள்ள தமிழக சட்டமன்றத் தேர்தலில் வாக்குப் போடுவதற்கு பணம் கொடுத்தாலும் வாங்கினாலும் ஒரு வருடம் சிறைத்தண்டணை விதிக்கப்படும் என தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீண்குமார் தெரிவித்துள்ளார். நேற்று சென்னை கோட்டையில் நிருபர்களுக்குப்பேட்டி அளித்தபோது அவர் கூறியதாவது?

தமிழக சட்டமன்றத் தேர்தலில், புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை இல்லாமல் வாக்குபோட முடியாது. அடையாள அட்டை இல்லாதவர்கள், தேர்தல் ஆணையம் வழங்கும் பூத் சிலிப்பை கொண்டு வாக்குப் போடலாம்.

இதுவரை 95 சதவீதம் பேருக்கு பூத் சிலிப் வழங்கி விட்டோம். மீதமுள்ளவர்களுக்கு அவரவர் வாக்குப் போடும் வாக்குச்சாவடியில் ஞாயிற்றுக்கிழமை காலை 10



மணி முதல் மாலை 5 மணி வரை வழங்கப்படும். வாக்குப் போடுவதற்காக பணம் கொடுப்பதும், பணம் வாங்குவதும் சட்டப்படி குற்றம்.

இவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் 171 (இ) பிரிவின் கீழ் ஓராண்டு சிறைத் தண்டனை வழங்கப்படும். ஸ்ரீரங்கம் தொகுதியில் வாக்குக்காக பணம் கொடுத்த 7பேரும், பண்ம் வாங்கிய 6பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பணம் கொடுப்பவர்களை மட்டுமல்லாமல், பணம் வாங்குபவர்களையும் சேர்த்துப் பிடிக்க வேண்டும் என்று உத்தர விடப்பட்டுள்ளது.

# மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்க உச்ச நீதிமன்றம் உத்தரவு!

(சென்னை)

இலங்கை கடற்படையினரின் தாக்குதலில் இருந்து தமிழக மீனவர்களைப் பாதுகாக்க, முப்படை பாதுகாப்பு வழங்கக் கோரிய பொது நல வழக்கை மதுரை உச்சநீதிமன்ற கிளை, ஏற்கனவே தாக்கலான வழக்குகளுடன் சேர்த்து விசாரிக்க, ஜூன் முதல் வாரத்திற்கு தள்ளிவைத்தது.மதுரை எட்டிமங்கலம் சட்டத்தரணி ஸ்டாலின் தாக்கல் செய்த பொது நல வழக்கில் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால், சுட்டு கொல்லப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 500 மீனவர்கள் வரை கொல்லப்பட்டதாக அதிகார பூர்வமாக தெரிவிக்கப்பட்டது. மீனவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு, இந்திய இராணுவத்திற்கு உண்டு. மீனவர்களை காப்பாற்ற அவர்கள் தவறி விட்டனர். எனவே, இந்திய கடல் எல்லையை வரையறை செய்ய வேண்டும். கச்ச தீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்து, அதை மீட்க வேண்டும். மீனவர் களுக்கு முப்படை பாதுகாப்பு வழங்க உத்தரவிட வேண்டும், எனத் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே, மீனவர்களுக்கு துப்பாக்கி வழங்க கோரும் வழக்குகளும் விசாரணைக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்



(புதுடில்லி)

தனது 4 நாள் உண்ணாவிரதத்தை அண்ணா ஹஸாரே இன்று காலை முடித்துக் கொண்டார்.

ஊழலுக்கு எதிரானதாகவும், ஊழல் புரிபவர்களை தண்டிக்கவும் வகை செய்யும் லோக்பால் மசோதாவை பாராளுமன்றில நிறைவேற்ற வலியுறுத்தி சமூக சேவகர் அண்ணா ஹஸாரே 3 நாள்களுக்கு முன்னர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். நாடெங்கும் அவருக்கு ஆதரவாக பொது மக்கள் திரண்டனர். ஊடகங்கள் மற்றும் மக்களின் அமோக ஆதரவால் மத்திய அரசு அண்ணா ஹஸாரேயுடன் பேச்சுவார்த்தைக்கு முயன்றது. லோக்பால் வரைவு மசோதாவுக்கு முயற்சி எடுப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து அண்ணா ஹஸாரே தனது 4 நாள் உண்ணாவிரதத்தை நேற்று காலை முடித்துக் கொண்டார்.


ஒரு குழந்தையின் கையில் இருந்து தண்ணீர் வாங்கிக் குடித்து அவர் தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தார். தனது போராட்டம் பொதுமக்களுக்குக் கிடைத்த வெற்றி என்றும், இந்தப் போராட்டத்தில் இன்னும் கடக்க வேண்டிய தொலைவு அதிகம் என்றும் அவர் தெரிவித்தார். இப்போது தான் உண்மையான போராட்டம் தொடங்கப் பட்டிருக்கிறது என்றார்.

அண்ணா ஹஸாரேவுடன் உண்ணாவிரதம் இருந்த மகளிருக்கு அவர் தண்ணீர் கொடுத்து அவர்களின் உண்ணாவிரதத்தையும் முடித்து வைத்தார். இது ஒரு தொடக்கமே, அரசாங்கம் லோக்பால் மசோதாவை நிறைவேற்றவில்லை என்றால் மீண்டும் இதே போன்ற போராட்டத்துக்கு எழுச்சியுடன் அமர்வேன் என்றும் குறிப்பிட்டார்.

## அரசாங்கத்தின் சலுகைகளை அனுபவிப்பவர்கள்

# மக்களுக்குக் கிடைக்கப்பெறும் உதவிகளை ஏன் விமர்சிக்கிறார்கள்?

### அவசரகால சட்ட விவாதத்தில் சந்திரகுமார் எம்.பி. கேள்வி



நாட்டைப் பாதுகாப்பதிலும் மக்களுடைய உரிமைகளைப் பேணுவதிலும் யாருக்கும் வேறுபாடான கருத்துகள் இருக்க முடியும் என்று நான் கருதவில்லை.

ஒரு சட்டமானது, நாட்டின் நன்மைக்காகவும் மக்களின் பாதுகாப்புக்காகவுமே உருவாக்கப்படுகிறது.

இந்த அவசரகாலச் சட்டத்தை முன்னர் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியே அதிக காலம் நடைமுறையில் வைத்திருந்தது என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**தெளிவான நிலையில் பிரச்சினைகளை அணுகுவோம்**

இன்று இந்த அவையிலே அவசரகாலச் சட்ட நீடிப்பை எதிர்க்கின்றவர்கள், முன்னர் இருந்த ஒரு அரசியற் சூழலில் - இதே அவசரகாலச் சட்டத்தின் நன்மைகளை முழுமையாக அனுபவித்தவர்கள் என்பதை இங்கே நினைவூட்ட விரும்புகிறேன்.

அப்பொழுது இவர்கள் கொழும்பை மையப்படுத்திய அரசியலில் ஈடுபட்டிருந்தனர். ஆகவேஇவர்களுக்கு அன்று அவசரகாலச் சட்டத்தின் தேவையிருந்தது.

இன்று இவர்களின் அரசியல் தேவை மாறியுள்ளது. எனவே அவசரகாலச் சட்டத்துக்கு எதிராகப் பேசுகிறார்கள். ஆகவே இவர்கள் தமது தேவைகளுக்காகவே இந்தச் சட்டத்தை எதிர்க்கிறார்களே தவிர, மக்களின் நன்மைக்காக என்ற நோக்கிலிருந்து இதை எதிர்க்கவில்லை.

இவ்வாறே இவர்கள் மக்களின் நோககிலிருந்தும் மக்களுக்கான தேவைகள் என்ற நிலையில் இருந்தும் எதையும் எதிர்க்கவும் இல்லை. எதையும் வரவேற்கவும் இல்லை.

அப்போதும் தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் இருந்தன. அத்துடன் இந்த நாடு இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய பொறுப்பிலும் இருந்தது.

ஆனால், நாம் எப்பொழுதும் மனப்பூர்வமாக இந்த அவசரகாலச்சட்டத்தை ஆதரிக்கவில்லை. இதை நாம் எப்போதும் வெளிப்படையாகவே சொல்லியும் வருகிறோம்.

இந்த நாட்டிலே அமைதிச் சூழல் ஒன்று உருவாகி, பிரச்சினைகள் தீர்ந்து, முழுமையான ஜனநாயகச் சூழல் நிலைபெறும்போதுதான் அவசரகாலச் சட்டம் தளர்ந்து போகும்.

ஆகவே அத்தகைய ஒரு நிலைமையை உருவாக்குவதற்காகவே நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். அந்த இலக்கிலே நாம் கட்சி வேறுபாடுகள், கொள்கை நிலைப்பாடுகளுக்கு அப்பால் பாடுபட வேண்டும் என்று விரும்புகிறேன்.

இதன்படியே - நிறைவான வாழ்க்கையை - பாதுகாப்பான முறையில் மக்கள் பெற வேண்டும் என்ற ஒரு அரசியல் இலக்கில் - எமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம். இதற்காகவே நாம் அபிவிருத்தியும் அரசியற் தீர்வும் என்ற ஒருங்கிணைந்த நடவடிக்கையில் செயற்படுத்தி வருகிறோம்.

இந்த விடயத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் எப்போதும் தெளிவாகவே இருக்கின்றோம். புலிகளின் காலத்திலும் நாங்கள் அபிவிருத்தி என்ற இலக்கில், அத்தனை நெருக்கடிகளின் மத்தியிலும் செயற்பட்டிருக்கிறோம்.

இப்போதுள்ள சூழலில் இதை மேலும் விரிவாக்கிச் செயற்படுத்தி வருகிறோம். அதேவேளை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்ற விடயத்திலும் நாங்கள் அக்கறை கொண்டே உள்ளோம்.

அதற்காகத்தான் நாங்கள் தமிழ்க் கட்சிகளின் அரங்கம் என்ற அமைப்பை உருவாக்கினோம்.

தேர்தல் காலத் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பல்ல இந்த அரங்கம்.

ஆகவே, அபிவிருத்தியும் அரசியற் தீர்வும் என்பதை நடைமுறைக்குச் சாத்தியமாக்குவதற்காகவே நாங்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகிறோம். ஒரு தெளிவான நிலைப்பாட்டில் இருந்து கொண்டேதான் நாங்கள் பிரச்சினைகளை அணுகுகிறோம்.

எமது நிலைப்பாட்டை அரசாங்கமும், தமிழ் பேசும் மக்களும், பெரும்பான்மை இன மக்களும் புரிந்து கொண்டுள்ளனர்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

எமது நாட்டைப் பொறுத்தவரையில், அரசியல் ரீதியான பிரச்சினைகள் இன்னும் தீர்வு காணப்படாமல் இருக்கின்றன.

அரசியற் பிரச்சினைகளின் விளைவாக நாடு ஒரு பெரிய போரில் சிக்கித் தன்னுடைய முப்பது ஆண்டுகளை இழந்திருக்கிறது.

கடந்த முப்பது ஆண்டுகள் என்பது, மிகப் பயங்கரமான ஒரு காலகட்டமாக இலங்கைக்கே உத்தரவாதமில்லாத ஒரு யுகமாக இருந்துள்ளது. யுத்தத்தின் விளைவாக நாடு மிகப்பெரும் பின்னடைவைச் சந்தித்தது.

இந்த நிலைமைகள்தான் அவசர காலச்சட்டத்தை நீடிப்பதற்கான நியாயத்தை உருவாக்கின. இப்பொழுது யுத்தம் முடிவுக்கு வந்தாலும் அரசியல் பிணக்குகள் இன்னும் முழுமையான தீர்வை எட்டவில்லை.

**அரசின் சலுகைகளை அனுபவிப்பவர்கள் மக்களுக்குக் கிடைக்கும் உதவிகளை ஏன் விமர்சிக்கின்றார்கள்?**

அரசியல் தீர்வை எட்டுவதில் அனைத்துத் தரப்பினரும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அதைப்போல அரசியற் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அனைவருடைய பங்கேற்பும் அவசியமானது.

ஒரு ஜனநாயக நாட்டில், ஒரு ஜனநாயகச் சூழலில் பேணப்படவேண்டிய அடிப்படைகள் இவை. ஆனால், கடந்த காலத்திலும் போல இதற்கு விலக்காகவும் முரணாகவும் நடந்து கொள்ள முயலும் தரப்பினர்கள் இருக்கின்றனர்.

நாடு இயல்பு நிலைக்குத் முழுமையாகத் திரும்பும்போதுதான் அமைதி முழுமைப்படுத்தப்படும். அப்போதுதான் நாட்டின் அச்சுறுத்தலும் நீங்கும். அப்போதுதான் நாட்டினது அபிவிருத்தியும் முழுமையான நிறைவுடன் நடைபெறும்.

எங்களின் கடந்த காலம் நெருக்கடிகளின் மத்தியில் கழிந்ததைப் போலவே நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் போக்குவதற்குச் சிலர் முயற்சிக்கின்றனர்.

அவர்களுக்கு இந்த நாட்டில் அமைதி ஏற்படக்கூடாது. இயல்பு நிலை தோன்றக்கூடாது. அபிவிருத்தி நடை பெறக் கூடாது. மக்கள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழக்கூடாது என்பதெல்லாம் முக்கியமானது. ஏனென்றால், அவர்கள் மக்களின் அவலத்தைப் பெருக்கி, அதையே அரசியல் முதலீடாக்கி அதிலிருந்தே தங்களின் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

அரசாங்கம் அபிவிருத்தியை மேற்கொண்டால், அது மக்களுக்கு உதவிகளை வழங்கினால் அதற்குத் தவறான விளக்கத்தை அளிக்க முற்படுகிறார்கள். அதை சலுகை அரசியல் என்று கொச்சைப்படுத்தி மக்களின் மத்தியில் எதிர்மறையான தவறான விளக்கத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

அபிவிருத்தி என்பது வாழ்க்கைக்கும் எதிர்காலத்துக்கும் முக்கியமானது. உதவிகள் என்பவை வாழ்க்கைக்கு அவசியமானவை.

இவை இரண்டும் ஒரு நாட்டின் அவசியத் தேவை என்பதுடன், மக்களின் உரிமைக்கும் உரியவை. இவற்றை எப்படி யாரும் நிராகரிக்க முடியும்?

பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிப்பதன் மூலம் கிடைக்கின்ற அனைத்து உரிமைகளையும்சலுகைகளையும் ஆண்டு, அனுபவிக்கின்ற இவர்கள், அரசாங்கத்தினால் மக்களுக்கு உதவிகள் கிடைப்பதை மட்டும் விமர்சிக்கிறார்கள்.

தாங்கள் அனைத்து வளங்களோடும் வசதிகளோடும் வாழ வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டு, மக்கள் மட்டும் பற்றாக்குறைகளோடும் பிரச்சினைகளோடும் வாழ வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? இது எந்தவகையில் நியாயமானது? இவர்களைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தைப் போல உட்கட்டமைப்புகளைச் சிதைத்து

அவற்றைப் பேணுவதிலேயே மிகக் கரிசனையாக இருக்கின்றனர். தமது குறுகிய அரசியல் ஆதாயங்களுக்காகவும் தமது அரசியல் இருப்புக்காகவும் இவர்கள் இத்தகைய பிற்போக்கான அடிப்படைகளைப் பேணுகின்றனர்.

தாம் பேண முற்படும் இந்தத் தவறான நடைமுறைக்கு ஒரு அரசியல் முலாத்தைப் பூசிக் கொள்கின்றனர்.

**அரசியல் தீர்வை எட்டும் சூழல் உருவாகவேண்டும்**

அரசியல் தீர்வை எட்டுவதற்கான சூழலொன்றை இந்த நாட்டில் உருவாக்க வேண்டும்.

அதற்கு முன்னோட்டமாக மக்களின் வாழ்வாதாரங்களை முழுமைப்படுத்த வேண்டும். அத்துடன் மக்களுக்கான இயல்புச் சூழலை உருவாக்க வேண்டும்.

அதனை அடுத்தே அரசியல் தீர்வை நோக்கி நாம் பயணிக்க முடியும்.

இந்த அடிப்படையிலேயே நாம் மக்களுக்கான தீர்வை நோக்கி நகர விரும்புகிறோம். இப்போது வடக்குக் கிழக்கில் குறிப்பிடத்தக்க அளவில் நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அங்குள்ள மக்கள் இழந்துபோன தங்கள் கடந்த காலத்தின் பெறுமதியை உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மீண்டும் இன்னொரு நெருக்கடியான சூழலுக்குத் திரும்புவதை விரும்பவில்லை.

ஆகவேதான் அரசாங்கத்தின் உதவிகளையும் அபிவிருத்திகளையும் அவர்கள் முழு ஆர்வத்தோடு வரவேற்கிறார்கள்.

யாழ்ப்பாணத்துக்கும் பிற இடங்களுக்குமான போக்குவரத்தும் பிற தொடர்பாடல் வசதிகளும் இன்று மிகச் சுலபமாகியுள்ளன.

அடுத்த சில மாதங்களில் இது மேலும் விருத்தியடைந்து இன்னும் விரைவாகவும் இலகுவாகும் நடைபெறவுள்ளது. இதுதான் வளர்ச்சி என்பது.

இது மட்டுமல்ல ஏ-32 வீதியில் அமைந்திருக்கும் கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலம் 800 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு இப்பொழுது இந்தப் பாலத்தின் வழியாக மக்கள் பயணிக்கின்றனர்.

இந்தப் பாலத்தின் பயன்பாட்டை வடபகுதி மக்களே முழுமையாக அனுபவிக்கின்றனர். ஏ-32 வீதியின் புனரமைப்புப் பணிகள் நிறைவடையும்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் செல்வதற்கான நேரமும் தூரமும் மிகக்குறைந்து விடும்.

நேரத்தைச் சிக்கனப்படுத்தி, தூரத்தைக் குறைத்து, செயற்பாட்டை விரைவாக்கி அதிகரிப்பதுஎன்பது வளர்ச்சிக்கான அடிப்படையாகும்.

இப்பொழுது நாட்டிலுள்ள எவரும் எந்த நேரத்திலும் எங்கேயும் செல்ல முடியும். நாட்டிலிருக்கும் எவரும் எந்த நேரத்திலும் உலகத்தின் எந்தப் பாகத்திலிருக்கும் எவருடனும் தொடர்பு கொண்டு பேசலாம்.

அப்படியானதொரு வளர்ச்சி நிலை இன்று இலங்கையிலே ஏற்பட்டுள்ளது. இதற்காக இந்த நாடு பெரிய விலைகளைக் கொடுத்திருக்கிறது. இதற்காக தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்ற வேறுபாடுகளுக்கு அப்பால் எல்லோரும் மிகப் பெரும் கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள்.

ஆனால், அமைதிக்கு எதிராகச் சிந்தித்துக் கொண்டும் அமைதிக்கு எதிராகப் பேசிக் கொண்டும் அமைதியைக் குலைக்கும் விதமாகச் செயற்பட்டுக் கொண்டும் இருப்போருக்கு நிச்சயம் அச்சுறுத்தலும் நெருக்கடியும் இருந்தே தீரும். இது உலகப் பொது நியதியாகும்.

இந்த நெருக்கடியையும், அச்சுறுத்தலையும் யாரும் அவர்களுக்கு ஏற்படுத்துவதில்லை.

அதை - அவர்கள் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

இதற்கு கடந்தகாலச் சம்பவங்கள் நல்ல உதாரணமாகும்.

அமைதிக்கு எதிராகச் செயற்படுவோர் நிச்சயம் தாம் மேற்கொண்ட தவறான வழிமுறைக்கே பலியாக வேண்டிவரும் என்பதே அதுவாகும். இதுதான் உலக வழமை.

எனவே நாம் அமைதியையும், ஜனநாயகத்தையும் பாதுகாத்து அதை முழுமைப்படுத்துவதைப் பற்றி முதலில் சிந்திப்போம்.

## சன் சீ கப்பல் விவகாரம்

# மனிதக் கடத்தல் விவகாரக் குற்றச்சாட்டு கப்பல் சிப்பந்திகளுக்குப் பொருந்தாது

(கனடா)

எம்.வி. சன் சீ கப்பலில் கனடாவை சென்றடைந்த 492 பேரில் 12 பேர் கப்பல் ஊழியர்கள் எனவும் அவர்கள் இந்த மனித கடத்தல் திட்டத்தை முழுமையாக்குவதற்கு பங்களிப்பு செய்ததாகவும் கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் சபை வியாழனன்று தெரிவித்துள்ளது.

கப்பல் ஊழியர் ஒருவர் தொடர்பான விசாரணையின் போது இக்குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஊழியர் இலவச பயணத்திற்காக சமையல் வேலையையும், டீசல் இயந்திர அறையின் பணியையும் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊழியர், விசாரணையின்போது தனது பங்களிப்பை குறைத்து கூறுவதற்கு முற்பட்டதாக கூறப்படுகிறது. 3 மணித்தியாலக் கடமை நேரத்தின் போது பெரும்பாலும் தான் அங்கு நின்றுகொண்டிருந்ததாகவும், அவ்வப்போது கொள்கலன்களுக்கு எண்ணெய் ஊற்ற உதவியதாகவும் அவர் விசாரணையின்போது தெரிவித்தார்.

அதேவேளை, ஊழியர்கள் குழுவில் அங்கம் வகித்தமையால் மாத்திரம் அவர் கிரிமினல் அமைப்புகளினதோ, கடத்தல் வலையமைப்புகளினதோ அங்கத்தவராகிவிடமாட்டார் என அவரின் சட்டத்தரணி கூறியுள்ளார்.

மேற்படி குடியேற்றவாசிகளில் சுமார் 40 பேரை அகற்றுவதற்கு கனேடிய எல்லைப் பாதுகாப்பு முகவரகம் முயற்சிக்கிறது. அவர்களில் பலர் புலிகளின் அங்கத்தவர்கள் என்ற அடிப்படையிலும் அல்லது போர்க்குற்றம், மற்றும் மனிதக் கடத்தல் உட்பட ஏனைய குற்றங்களுடன் தொடர்பு பட்டவர்கள் என்ற அடிப்படையிலும் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது

## வவுனியா விவசாயக் கல்லூரியில் ஜூலையில் தேசிய விவசாய வார நிகழ்வு



(வவுனியா)


தேசிய விவசாய வாரம் எதிர்வரும் ஜூலை மாதம் 20ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இதனையொட்டிய விசேட நிகழ்வை வவுனியா விவசாயக் கல்லூரியில் நடத்த திட்டமிட் டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இது குறித்த விசேட கலந்துரையாடலொன்று அண்மையில் வவுனியா வில் இடம்பெற்றது.

தேசிய விவசாய வாரத்தை முன்னிட்டு விவசாயக் கண்காட்சி, விளையாட்டுப் போட்டி இடம்பெறவுள்ளதுடன், புதிய விவசாய முறை மற்றும் கிருமிநாசினியற்ற மரக்கறி தயாரிப்பு குறித்துப் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது.

# நெடுந்தீவில் மீட்கப்பட்ட சடலம் இந்திய மீனவருடையது தான்

## இந்திய கடற்தொழில் அமைப்பு அடையாளம் காட்டியது



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடந்த புதன்கிழமை மீட்கப்பட்ட ஆணின் சடலம் கடந்த 02ஆம் திகதி காணாமற்போன நான்கு இந்திய மீனவர்களில் ஒருவருடையது என நேற்று இனங்காணப்பட்டுள்ளது.

கடந்த 02ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்ற இந்திய மீனவர்களின் ஒரு படகில் சென்ற பிரான்சிஸ் அந்தோனி (வயது-34), ஜான்பால் (வயது-28), முத்துலிங்கம் மாரிமுத்து (வயது-30), சேவியர் விக்டஸ் (வயது-42) ஆகியோர் காணாமற் போன தாகத் தெரிவிக்கப் படுகின்றது.



இதேவேளை, கடந்த புதன் கிழமை நெடுந்தீவுக் கடற்பரப்பில் ஒரு ஆணின் சடலம் மீட்கப் பட்டிருந்தது. இச்சடலம் யாருடையது என்பது தொடர்பாகப் பல்வேறுவிதமான ஊகங்கள் நிலவிவந்த நிலையில், காணாமற்போன இந்திய மீனவருடையதா என்ற சந்தேகம் நிலவியிருந்தது.

இச்சடலம் யாருடையது என்பதனை அறிந்து கொள்ளும் முகமாக "இலங்கை - இந்திய நிரபராதி மீனவர்கள் விடுதலைக்கான கூட்டமைப்பின்" தலைவர் அருளானந்தம் தலைமையிலான ஆறுபேர் கொண்ட இந்திய மீனவர் குழு நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தது.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப் பட்டிருந்த இச்சடலத்தைப் பார்வையிட்ட மீனவர் குழு இது காணாமற்போன நான்கு இந்திய மீனவர்களில் ஒருவராகிய சேவியர் விக்டஸ் (வயது-42) என்பவருடையது தான் என உறுதிப் படுத்தியது.

நீரில் இச்சடலம் சில நாட்கள் வரை இருந்தமையால் இந்தியாவிற்குக் கொண்டு செல்ல முடியாத நிலை காணப்பட்டிருந்தது.

இந்த வழக்கினை விசாரித்த ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் சடலத்தை யாழ்ப்பாணத்திலேயே அடக்கம் செய்யுமாறு உத்தரவிட்டார். (மி)

# சம்பள அதிகரிப்பு இல்லையேல் தொழிற்சங்க நடவடிக்கையாம்

## பல்கலை விரிவுரையாளர் சங்கம் எச்சரிக்கை



(கொழும்பு)

ஒரு மாதத்திற்குள் சம்பள அதிரிப்பு பிரச்சினை தீர்க்கப்படாவிடின் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக இலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பள உயர்வு குறித்து அரசாங்கத் திடம் வலியுறுத்தப்பட்டுள்ள போதும் அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மகிந்த மெண்டிஸ் தெரிவித்தார்.

எதிர்வரும் மே மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காவிடின் தமது சங்கத்தவர்கள் பதவியிலிருந்து விலகுவார்கள் என அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, சம்பள உயர்வு குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தாவிடின், உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளில் இருந்து விலகிக் கொள்ளவுள்ளதாகவும் இலங்கை பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## இலங்கை அரசுடன்......

இவ்வாறான உரையாடல்களின்போது இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலுடன் இணைந்து பணியாற்றுவதை அமெரிக்க இராஜதந்திரிகள் ஊக்கப்படுத்தி வருகின்றனர்.

அமெரிக்காவின் மேற்படி நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே அந்த நாட்டின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவிச் செயலர் றொபேட் ஓ பிளேக் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் பிரதி நிதிகளைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இச்சந்திப்பை சில ஊடகங்கள் தவறாகச் சித்திரித்துள்ளதாகவும் இது தொடர்பான உண்மை நிலையை விளக்கும்போதே றொபேட் ஓ பிளேக் மேற்படி விபரங்களை வெளியிட்டார்.

இது தொடர்பாக அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலர் றொபேட் ஓ பிளேக் தெரிவித்ததாவது,

அமெரிக்கா பிரிவினை வாதத்திற்கு ஒருபோதும் ஆதரவளிக்கவில்லை என்பதனை உறுதிபடக் கூறுகின்றேன். ஒன்றுபட்ட, அமைதியான, ஜனநாயக இலங்கையையே அது விரும்புகிறது.

குடியியல் சமூகம் மற்றும் சர்வதேச சமூகம் என்பன இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தியை ஊக்கப்படுத்துகின்றன.

அத்துடன், எனது இலங்கைக்கான பயணம், ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் இடம்பெற இருந்தது. எனினும், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் வெளிநாட்டில் தங்கியுள்ளதனால், எனது பயணத்தைப் பிற்போடுமாறு இலங்கை அரசு கேட்டுக்கொண்டது. அதற்கிணங்க எனது இலங்கைக்கான பயணம் மிக விரைவில் மேற்கொள்ளப்படும்.

நான் இலங்கைக்கு மேற்கொள்ளவுள்ள பயணம் சாதாரணமானது. இலங்கை அரசாங்கத்துடன், மக்களுடன் மற்றும் ஏனைய தரப்பினருடன் கலந்துரையாடல்களை நடத்த வேண்டியிருக்கிறது.

இலங்கையின் முன்னேற்றங்கள் குறித்து அறிந்து கொள்ளவும், அமெரிக்காவின் கொள்கையை, இலங்கை அரசுக்கு விபரிக்கவும் வேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ்.நகர மத்தியில்....

என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். குறித்த நபர் திருகோணமலை யிலிருந்து யாழ். வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள தனது சகோதரியின் வீட்டிற்கு வந்து விட்டு நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் மீளவும் திருகோணமலை செல்வதற்காக யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்குச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்பின்னர், இவர் மத்திய பேருந்து நிலையத்தின் காரியாலயத்திற்கு முன்னாலிலுள்ள பேருந்து நிலையத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது தலையின் பின்புறமாக மண்டை பிளந்து இரத்தம் வெளியேறிக் காணப்பட்டது.

குறித்த நபர் பேருந்து நிலையத்தில் நித்திரை செய்வதாக, அங்கு பயணத்திற்காக வந்த பலரும் நினைத்துச் சென்றுள்ளனர். அப்பகுதியில் கடமையிலிருந்த பொலிஸார் குறித்த நபரின் சட்டைப் பையிலிருந்த அடையாள அட்டையை எடுத்து, திருகோணமலையிலுள்ள அவரின் குடும்பத்தாருக்கு அறிவித்ததாகவும், அவர்கள் வைத்தியசாலை வீதியிலுள்ள சகோதரியின் வீட்டிற்குத் தகவல் கொடுத்ததாகவும், அதன்பின் உறவினர்கள் சம்பவ இடத்திற்கு வந்து பொலிஸாருடன் இணைந்து சடலத்தை வைத்திய சாலையில் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## கடற்படைச் சிப்பாய்...

பட்டுள்ளனர். இவ்வாறு சுண்டிக்குளம் கடற்படை முகாமிலுள்ள அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும், இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என கடற்படைப் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார். கடற்படையினர் காணாமல் போனது தொடர்பில் உயரதிகாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாக வெளியான தகவல் தொடர்பில் கருத்துக் கூறும்போதே கமாண்டர் வர்ணகுலசூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்

## இலங்கையிலுள்ள....

போன்று, ஊடகவியலாளர்களின் தவறுகளுக்கும் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். அதற்கொரு அமைப்பு இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

**DLF INDIAN PREMIER LEAGUE**

### நேற்றைய ஆட்டங்கள்

டெக்கான் சாஜஸ் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ்
மைதானம்-ஹைதராபாத்
டெக்கான் சாஜஸ் - 137/8
ராஜஸ்தான் றோயல்ஸ் 141/2
8 விக்கெட்டால் ராஜஸ்தான் றோயல்ஸ் வெற்றி
ஆட்டநாயகன் - திரிவேதி (ராஜஸ்தான் றோயல்ஸ்)

கொச்சி ரஸ்கர்ஸ் எதிர் பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ்
மைதானம் - கொச்சி
கொச்சி ரஸ்கர்ஸ் - 161/5
பெங்களூர் றோயல் 162/4
பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் 6 விக்கெட்டால் வெற்றி. ஆட்டநாயகன்-ஏ.பி.டி. வில்லியம்ஸ்.

## திருமலையில் பதவியேற்பு

வைபவம் நேற்றுக்காலை திருகோணமலை நகரசபை மண் டபத்தில் நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சரவணபவன், அரியநேத்திரன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிறேமச்சந்திரன் மற்றும் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் உட்படப்பலர் கலந்து கொண்டனர்.

# மரணித்த தமிழக மீனவருக்கு அமைச்சர் டக்ளஸ் இறுதி அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த புதன்கிழமை கரையொதுங்கிய மீனவரின் சடலத்தைப் பார்வையிட வந்திருந்த இந்திய மீனவர் சங்கக் குழுவை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கை இந்திய நிரபராதி மீனவர்களின் விடுதலைக்கான கூட்டமைப்பின் தலைவர் அருளானந்தம் தலைமையில் நேற்று 5 பேர் கொண்ட இந்திய மீனவர் குழுவினர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகைதந்திருந்தனர்.

அப்போது யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த துறை சார்ந்த தமிழ் நாடு கடற்றொழிலாளர் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் உறவினர்களுடன் கலந்துரையாடியதுடன் சம்பவம் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி சிவரூபன் ஆண்மகுரு மற்றும் பொலிஸ், கடற்படை அதிகாரிகளுடன் அமைச்சர் அவர்கள் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

சடலம் பழுதடைந்த காரணத்தால் இந்தியாவிற்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் சடலத்தை யாழ்ப்பாணத்தில் அடக்கம் செய்ய வேண்டும் என இந்தியத் தரப்பினரால் கேட்டுக் கொண்டதற்கிணங்க சடலத்தை உரிய முறையில் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்வதற்கேற்ற நடவடிக்கையினை சேமக்காலைக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய தரப்பினர் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியக் கடலில் மீன்பிடித்த 5 இலங்கை மீனவர்கள் கைது

இந்திய கடலோர காவல் படையினர் இந்தியக் கடற்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இந்திய கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்த ஒரு படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 5 இலங்கை மீனவர்களை சுற்றி வளைத்து கைது செய்துள்ளதாகவும், அவர்கள் வந்த படகையும் பறிமுதல் செய்துள்ளதாகவும் இந்திய ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை மீனவர்கள் 5 பேரையும் சென்னை துறைமுக பொலிஸாரிடம் இந்தியக் கடற்படையினர் ஒப்படைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. அத்துடன் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கைதான இலங்கை மீனவர்கள் மாஸ்டர் சம்பத் (வயது - 35), பிரதீத் (வயது -30) உள்பட 5 பேரையும் பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர் அவர்கள் புழல் சிறையில் அடைக்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# நாடு திரும்பும் அகதிகள்; ஐ.நா. அலுவலகம் தகவல்

வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியிருந்த 600 இலங்கை அகதிகள் மீண்டும் நாடு திரும்பியிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

அதில் பெரும்பாலானவர்கள் இந்தியாவில் இருந்து மீண்டும் நாடு திரும்பியிருப்பதாகவும், பிரான்ஸ், கனடா, ஜேர்மன், ஐக்கிய இராச்சியம், சுவிட்சர்லாந்து, மலேசியா, அவுஸ் திரேலியா ஆகிய நாடுகளில் இருந்தும் கணிசமானவர்கள் அவ் வாறு நாடு திரும்பியிருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்துக்கான இலங்கைப் பிரதி நிதி மைக்கல் ஸ்வெக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் யுத்தம் முடிவுற்ற நிலையில், இலங்கை அகதிகள் நாடு திரும்புவதில் கடும் ஆர்வம் காட்டி வருவதாகவும், கடந்த வருடம் மட்டும் 3200 பேரளவில் நாடு திரும்பியிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு நாடு திரும்பியவர்களுக்கு உதவுவதற்கென வடக்கு மாகாணத்தில் மட்டும் தற்போதைக்கு ஐந்து இணைப்புக் காரியாலயங்களை நிறுவியுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபைக்கான அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

# இலங்கைப் பணிப்பெண்கள் எவரும் நிர்க்கதியான நிலையில் இல்லை

## வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜோர்தானுக்கு வீட்டுப் பணிப்பெண்களாகச் சென்று வீட்டு உரிமையாளர்களின் துன்புறுத்தல்களுக்கு உள்ளான 24 இலங்கை பெண்கள் நிர்க்கதி நிலை அடைந்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாதென இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

எனினும் ஜோர்தானில் பணிபுரியும் 37 இலங்கைப் பணிப் பெண்கள் தமது வீட்டு உரிமையாளரால் விசா நீடிக்கப்படாமல் இருந்ததாகக் கூறி ஜோர்தானிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு வந்திருந்ததாக பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த நிலையில் சிலர் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இது குறித்து ஜோர்தான் பொலிஸில் முறைப்பாடு செய்ததை அடுத்து தப்பிச் சென்றவர்கள் கைது செய்யப்பட்டு மீண்டும் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

# காணாமற்போனவர்கள் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு அதிக முறைப்பாடு

கல்முனையில் 370 பேர் சாட்சியமளித்துள்ளதாக உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு அறிவித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற அமர்வின் போது இவ்வாறு சாட்சியமளிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஸ்மன் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு முதல் காணாமல் போனவர்கள் குறித்து இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. காணி உரிமை தொடர்பிலும் எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன. மார்ச் மாதம் 26 ஆம் திகதி மொனராகல பிரதேசத்தில் நடைபெற்ற அமர்வுகளின் போது அநாதைச் சிறுவர் சிறுமியர் பற்றி அதிகளவு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# முதியோர் சங்க கூட்டம்

(ஆனைக்கோட்டை)

நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு நவாலி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (104)

## உயர் நீதிமன்றத்.....

அரசாங்க தரப்பிற்கு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமை தாங்கினார். அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன ஆகியோரும் இக்குழுவில் இடம்பெற்றனர்.

மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு உயர் பாதுகாப்பு வலயம் கடும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் மாத்திரமே முறையாக மீளக்குடியேற்றப் பட்டுள்ளதாகவும் மாவை சேனாதிராஜா எம்.பி. தெரிவித்தார்.

பாதுகாப்பாக மீளக்குடியேற்றப்பட்ட மற்றும் மீளக்குடியேற்றப்பட வேண்டிய இடம்பெயர்ந்த மக்கள் குறித்த தகவல்களை நாம் அரசாங்கத்திற்கு வழங்கினோம்.

உதாரணமாக, வலி. வடக்கில் 83,000 இடம்பெயர்ந்த மக்களில் 9000 பேர் மாத்திரமே மீளக்குடியேற்றப்பட்டுள்ளனர். அங்குள்ள 45 கிராம சேவகர் பிரிவுகளில் 6 பிரிவுகளில் ஒரு குடும்பம் கூட மீளக்குடியேற்றப்படவில்லை. நான் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள நிலையிலும் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக அங்குள்ள எனது வீட்டிற்கு செல்ல முடியவில்லை. சம்பூர் மாத்திரமே சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு உயர் பாதுகாப்பு வலயமாகும் என மாவை சேனாதிராஜா கூறினார்.

மேற்படி கலந்துரை யாடலின்போது அதிகாரப் பரவலாக்கம் குறித்துப் பேசப்படவில்லை எனவும் இது குறித்து பின்னர் பேசப்படும் எனவும் அவர் கூறினார்.

## கையடக்கத்....

மூலம் விபரங்களை வழங்குவதன் ஊடாக பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள முடியும் என தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய தெரிவித்தார்.

இத்திட்டத்தின்படி, இச்சான்றிதழ்களைப் பெறுவதற்கு பிரதேச செயலகங்களுக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை. சான்றிதழ்கள் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்படும். இதற்கான கட்டணங்கள் கையடக்கத் தொலைபேசி மூலம் செலுத்த முடியும் எனவும் அவர் கூறினார்.

## பனைவள அபிவிருத்தியின்...

போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், வட மாகாணத்தில் தரமான பனஞ்சாராயத்தை உற்பத்தி செய்வதுடன், இதன் மூலம் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளைப் பெருக்கிக் கொள்ளவும் முடியும் என்பதுடன், சமூக முன்னேற்றத்திற்கும் பங்களிக்க முடியும். அத்துடன் நாடளாவிய ரீதியில் கற்பகம் விற்பனை நிலையங்களை நிறுவி அவற்றின் மூலமாக பனைசார்ந்த உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய முடியும் என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதன் மூலம் பனைசார் உணவு உள்ளிட்ட உற்பத்திகளை விற்பனை செய்யக் கூடியதாகவும், அதுசார்ந்த குடும்பங்களின் வாழ்வை மேம்படுத்த முடியுமென்றும் அதுவே தமது தூரநோக்குக் கொண்ட சிந்தனையென்றும் தெரிவித்தார்.

முக்கியமாக பனைசார்ந்த உற்பத்திப் பொருட்கள் சுத்தம் சுகாதாரமான முறையில் மட்டுமல்லாது, தரமாகவும் உற்பத்தி செய்யப்படும். அதேவேளை, இவற்றின் மூலம் மக்கள் அதிகளவான பயன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

# மரண அறிவித்தல்

## கலைஞானச்சுடர் டானியல் தேவமதுரம்

**(ஓய்வுபெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர், கல்வித் திணைக்களம், முன்னாள் உப செயலாளர் - நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை)**



அரியாலை மேற்கு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **திரு. டானியல் தேவமதுரம்** அவர்கள் 09.04.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டானியல் - இராசமணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும், சுகிர் நாகேந்திரா, சுதன் சுகேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராணி, மோ.தேவமணி, ஜெ.கோகிலமணி, டா.வரதராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சு.மோசஸ், பொ.ஜெகானந்தராஜா, வ.றீற்றா கமலவேணி மற்றும் எம்.எஸ். பொன்னுத்துரை ஆகியோரின் மைத்துனரும், பொ.சந்திராதேவியின் மனைவி வழிச் சகோதரரும், பொ.சந்திரகுமார், பொ.ராஜ்குமார், ம.நந்தினி, மோ.ஷாந்தன் சத்தியகீர்த்தி, மோ.சேந்தன் சத்தியதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வ.ஜோய் வாகினியின் பெரிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.04.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 7, பூமகள் வீதி, அரியாலை மேற்கு,**
**யாழ்ப்பாணம்.** **தகவல்**
**தொலைபேசி:- 0774745573, 0779810877 குடும்பத்தினர்.**
(114)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.